30 APR 1918

# பிரஜாநுகூலன்,

அநுபவ விநோதங்களடங்கிய மாதப்பத்திரிகை.

வருஷ சந்தா ரூபா 2.] Copy Right. [வெளிநாடு ரூ. 2—8—0.

| | | |
|---|---|---|
| வருஷம் 14. | திரிச்சிராப்பள்ளி : எப்பிரல் மீ —1918. | மாதம் 5. |

## ஒரு மாதத்தின் சரக்கு.

எவ்வளவுதான் நல்லவிதமாக வணங்கி நடப்பினும், எவ்விதமோ ஒரு சிறு காரணம் பற்றி, விரோதம் உதயமாய் விடுகின்றது. நம்மீது துவேஸம் சாதிக்கத் தொடங்கி விடுகின்றனர். ஹா! கடவுளே! இதென்ன சோதனை!

நீ விவாகம் செய்துகொள்ளப்போகும் பெண்ணினுடைய தாய்தந்தையரின் சுபாவங்களையும் நன்றாக விசாரித்து அறிந்துகொள். கோட்சொல்லியான மாமியையும், உனக்கு—பின் விரோதியாகக்கூடிய மாமனையும் நீ பெறுவதைவிட கழுத்துக்கு வேறு கத்தி வேண்டாம்.

சில நன்றிகெட்ட ஜென்மங்களுக்குக் காலமுழுதும் எவ்வளவுதான் செய்தாலும் விஸ்வாசம் இருப்பதேயில்லை. குற்றம் கண்டுபிடிப்பதே தொழில். அவர்களுடைய அதிகார ஆக்கினைகளுக்கு உட்படாவிட்டால்,—ஒரே ஒரு சமயம் மறுத்தாலுங்கூட,—உடனே பகைமை உண்டாய்விடுகின்றது. எவ்வளவுதான் சகிப்பது?

ஒரு பெண் தன் கணவனின் காரியங்களில் பற்றுதலின்றி, அந்நிய ஸ்திரீபோல் நடந்துகொள்வாளாகில், அப்புருஷனின் வாழ்க்கை எவ்வளவு அலங்கோலத்தில் வந்து முடிகின்றது! அவன் தன் காரியங்களை உற்சாகத்தோடும் செய்ய, அவனுக்கு ஸக்தி எப்படிதான் உண்டாகும்?

ஒரு குடும்பம் பாழ்பட வேண்டுமென்று தவமிருப்போரின் கண் முன்பாகவும், இவனுக்கும் இவ்வளவு வாழ்வா—என்று எரிச்சல் படுவோர் முன்பாகவும், நாம் படும் சோதனைக் கஷ்டங்களை நோக்கி மகிழ்வோர் முன்பாகவும்—நாம் வாழ்வதைவிட, வேறு ஊருக்கு நமது வாசஸ்தலத்தை மாற்றிக்கொள்வது மேல்.

ஒருவன் பாயிற் படுத்தால், அவனை நடுவில் உறவினர் வந்து விசாரித்துச் செல்வர். மறுபடியும் எட்டிப்பாரார். "அவன் இனி பிழைப்பதேது"—என்று ஒரு கதையையும் கட்டிவிடுவர். எப்போது அவனது மரண ஓலை வருமோ எனக் காத்திருப்பர். அது கிடைத்ததும் உடனே துக்கம் கொண்டாட அந்த சவத்தை வந்து சூழ்ந்துகொள்வர் இவர்களுக்கே ஆப்தபந்துக்கள் என்று பெயர்.

ஒரு பெண் வேலையின் கடுமையால் அலுத்து சற்று உட்காரப் பார்த்தாலும், உடனே திட்டுகள்—வசைகள்—தொடங்கிக்கொள்ளும். அந்த மிதமீறிய உழைப்பே அவளைப் பிணிவாய்ப்படச் செய்து வியாதிப் படுக்கையில் கிடத்திவிட்டாலோ, அப்போது மட்டும் வெகு உருக்கமாய் உபசரிக்கச் சூழ்ந்துகொள்வார்கள்! என்னே உலகின் போக்கு!

நன்றாகப் புசிக்க ஸக்தியிருந்த போது உண்ணக் கொடுப்போரெவரையும் காணோம்! பால்கூட வாயிற் செல்லாத நிலையில் இருக்கும்போது மட்டும், பழவர்க்கங்களும் பலகார பக்ஷணாதிகளும் கொணர்ந்து—எது வேண்டும்—எது பிரியம்—எனக் கேட்கத் தொடங்குகிறார்கள்.

ஏற்கெனவே சௌகரியமாக ரயிலில் இடம் தேடிக்கொண்டோர், தம்மைக் கெஞ்சிக் கேட்போருக்கு சற்று விலகி இடம்தர வெகு முணுமுணுக்குகிறார்கள். இவர்களுக்கே அப்படி இடம் வேண்டியதாயிருக்கிற சமயம் நேர்ந்து கொள்ளின், அப்போது மட்டும்—மற்றவர்கள் தங்களுக்கு இடம் கொடுத்தே தீரவேண்டுமென்று ஆத்திரப்படுகின்றனர்.

நாகரீகம் மிஞ்சிவிட்டது. இனி நம் நாட்டு ஸ்திரீகள் தங்களின் கற்பு நலத்தை யழித்துவிட்டதாகத் தங்கள் புருஷர்கள்மீது கோர்ட்டில் கேஸ் தொடரவும் காலம் வந்துவிடுமோ யாதோ?

நன்மை செய்ய நாடுவதில்தான் நேசர்களுக்குப் பரஸ்பரம் பேராசை பொருந்துதல்வேண்டும். எழுதும் கடிதங்களில் அன்பு கொஞ்சமாகவும், நடவடிக்கையில் அதிகமாகவும், சந்தித்த காலம் மிதமீறிப் போகும்படியும் நட்பு விருக்ஷத்தை வளர்க்கவேண்டும்.

தான் எவ்வளவோ பாசமும் பிரேமையும் செலுத்திக் காதலித்துள்ள தன் மனைவி அருகிலேயே இருக்க, அவள் தன்னை விரும்பாதுபோக, இனி அவளிடத்தில் சுகித்தல் கூடாதென்றும் வேறு விவாகம் செய்துகொள்ளும்படியும் ஒருவன் திடீரென்று வற்புறுத்தப்படுவானாகில், அவன் நெஞ்சு என்ன பாடு படும்? அந்த வேதனையை ஸகித்து ஜீரணித்துக்கொள்ள மனித ஸக்தியால் சாத்தியமா? ஐயோ! இதனினும் சோதனை வேறு என்ன உண்டு?

## வக்கீல்களும் வைத்தியர்களும்.

கேஸ் கோர்ட்டில் தோற்றுப்போனாலும், மேல் கோர்ட்டிலும், அதற்கு மேலுள்ள ஹைகோர்ட்டிலும் போராடி ஜெயித்துத் தருகிறேனென்று, தனது பணத்தைப் பாக்கியில்லாமல் பெற்று, கக்ஷிக்காரனுடைய கண்களைத் துடைத்து வீட்டுக்கு அனுப்பும் வக்கீல்கள் சிலர் உளர்.

வைத்தியர்களுள்ளும் பெரும்பான்மையோர் ஒரு நோயாளிக்குப் பாதி வைத்தியம் செய்துவிட்டு, பணத்தைமட்டும் சரியாக வாங்கிக்கொண்டு, காளமேகத்தைலம் காய்ச்ச மேலுக்கு ரூபாயும் பெற்றுக்கொண்டு, திடீரென வேறோரிடத்திற்குப் போய்விடுகின்றனர். பிணியாளர்கள் அன்னோரைக் காணாது வாடி, பிறகு இன்னொரு வைத்தியனிடம் போக—அஃதானது ஒரு புருஷனிடம் வாழ்ந்த நங்கை, இன்னொருவனிடம் வாழ்க்கைப்படச் செல்வது போலாகி—ஒரு வைத்தியத்துக்கு இன்னொரு வைத்தியம் பொருந்தாமல் அலங்கோலமடைய நேர்கிறது.

## விவாகச் செலவு.

ஒரு தகப்பன் தனது மூத்த பெண்ணுக்கு பத்து பிராயமாகும்போது, பெண்ணுக்கு வயதாய்விட்டதென்று விவாகத்தை நிச்சயிக்கிறான் பின்னிட்டு செலவோடு செலவாய்ப்போகும்படி 5, 4, வயதுள்ள தனது மற்றிரண்டு பெண் சிசுக்களுக்கும் தாலியைக் கட்டிவிடுகிறான் இதனால் கல்யாணச்செலவு பால்யவிவாகத்தைக் கொண்டுவருகிறதென்ற நியாயம் ஸ்பஷ்டமாகிறது. விவாகச் செலவைக் குறைப்பினோ மனஸ்தாபங்கள் உண்டாய்விடுகிறது. இதற்குத் தப்பும் வழி எப்படி? அதுதான் பெரிய கேள்வி.

## ரகஸ்ய கிருதாபம்.

இரகஸ்யமாகச் செய்யும் பாபம் பெரியதாய் முடியும். கப்பலிலுள்ள சிறிய ஓட்டை பெரிய மரக்கலத்தை மூழ்குவிக்கும். ஒரு சிறிய பேனாக்கத்தி பெரிய மனிதனுடைய உயிரைப்போக்கும். மேற் கூறியதுபோல், சிறிய பாபமே—அந்த ஒரு ரகசியத் தவறுதலே, ஒருவனுடைய வாணாளின் ஸன்மார்க்க மனத்தையும் சிதறடித்து விடுகின்றது. என் மனம் பாப விஷயங்களில் செல்லாதிருத்தற்பொருட்டு, நான் எங்கேயாவது வெளியேபோக நேரும் சமயத்திலும்—அரைமணி ஸாவகாசம் அகப்படாதா—அப்போது படிக்கப்படாதா—என்ற எண்ணத்துடன் என்னுடைய சொக்காய்ப் பையில் புஸ்தகமொன்று கொண்டுபோவது வழக்கம். பாபம் செய்யத் தோன்றும்போது புஸ்தகத்தை அதன் எதிரே வைத்துவிடுவது எனது சுபாவம்.

## துஷ்கிருத்யம்.

ஒவ்வொரு பாபகிருத்யமும் அதற்கேற்ற தண்டனையைப் பின்னால் வைத்துக்கொண்டிருக்கிறது. மனுஷ்யனோடு அவனுடைய நிழல் செல்வதுபோல் துஷ்கிருத்யத்தோடு சிக்ஷை செல்லுகிறது. உதாரணமாக, ராமன் ஏழையாக வேண்டுமென்று நாம் எண்ணும்போது வறுமை நம்மைத் தொடருகிறது. கடவுளின் கட்டளையை நாம் மீறி நடக்கும்போது அக்கட்டளையே நம்மை வாட்டுகிறது. அதுவே நமக்குத் தீங்கிழைக்கிறது. ஈசுவரன் நம்மைத் தண்டிக்கிறாரென்பது பிசகு. ஸர்வேசுவரன் தயாளு. எல்லோரிடமும ஸமமான பிரீதியுடையவர். அவருடைய கருணைக்கு அளவில்லை. பகவான் நமக்கு எப்போதும் நன்மையைச் செய்துகொண்டிருக்கிறார். இரண்டோரிடங்களில் மட்டும் தேவதைகளின் ஆவேஸத்தால் நிரபராதிகளான உத்தமர்களும் கஷ்டமடைய நேர்ந்து கண்கலங்க ஸம்பவிக்கிறது. நன்றாய் வாழ்ந்த குடும்பங்களும் நலங்கெடுகிறது. இப்படி நேர்வதின் காரணம் மட்டும் விளங்கவில்லை.

## அன்னியபாஷையின் மூலமாகப் பயிற்சி.

இந்தியாவில் பால்யர்கள் அந்ய பாஷையிலேயே ஸகல சாஸ்திரங்களையும் அப்பியாஸம்செய்ய வேண்டியிருக்கிறது இங்கிலீஷ்காரனாகிய ஜான் என்பவனைத் தமிழ் பாஷையில் எழுதியிருக்கும் இங்கிலாந்து தேச சரித்திரத்தைப் படியென்றால் இலகுவாயிருக்குமா? ஒவ்வொரு பிரஞ்சுக்காரனும் சீனபாஷையில் எழுதியுள்ள பூகோள சாஸ்திரத்தை அப்பியஸிக்க வேண்டுமென்றால் அது சுலபமாயிருக்குமா? இப்படியே இந்தியாவில் சிறுவர்களை ஸகல பாடங்களையும் இங்கிலீஷ் பாஷையில் படித்துத் தேற வேண்டுமென்று கட்டளையிட்டிருப்பது பாரமன்றோ!

## பரீக்ஷையின் கஷ்டங்கள்.

உலகத்தில் ஒவ்வொருவனுக்கும் பகவான் புத்தியைக் கொடுத்திருப்பதால் ஏதேனும் ஒரு காரியத்துக்கு அவன் உபயோகியாவான். கணித சாஸ்திரத்தில் வல்லவனான ராமனுக்கு சரித்திர பாடம் வராததால், வருஷந்தோறும் பரீக்ஷை தவறிக் (fail) கொண்டே போகிறது. இதனால் மேல் வகுப்புக்குப் போக இயலாமல், அவனுக்குக் கணித சாஸ்திரத்திலுள்ள சாமர்த்தியமும் பிரகாசமாகாமல் அவனுடைய ஜென்மமே வியர்த்தமாகிறது. இது பரீக்ஷையால் நேர்ந்த தீங்கன்றோ? இப்படி எத்தனையாயிரம் இளைஞர்கள் நாட்டுக்கு உபயோகமின்றிப் போகின்றனர்.

யழைத்துக்கொண்டு கும்பகோணத்துக்கு எல்லோரும் வந்து சேர்ந்த மூன்ரும்நாள் இரவு, எனது தந்தை தமது முந்திய நேசியான கன்னுயி என்ற தாசி தமக்கு "புது மாப்பிள்ளை" என்ற முறையில் தந்த புஷ்ப தாம்பூலாதிகளைத் தமது புது மனைவியிடம் கொடுத்து, அதன் வரலாறும் தெரிவித்து புஷ்பத்தை சூடிக் கொள்ளுமாறு கூறினர். அதற்கு ருக்மணி என் பிதாவை நோக்கி, "நாளைக்கு உன்னை மூலையில் சாய்த்து வைத்துப் பாடை கட்டுகிற போது—அழுவதும் தாலி யறுப்பதுவும் நானு—அல்லது அந்தத் தேவடியாளா?" என்று கூறி, அப்புஷ்ப தாம்பூலாதிகளை என் பிதாவின் முகத்தில் விட்டெறிந்தாள். என் பிதா மாடி மீதிருந்து இறங்கி எங்களிடம் வந்து-"தன்னை அப்படிப் பேசினுள்"-எனக் கூறி அழுதார். பிறகு எல்லோரும் அவரைச் சமாதானப்படுத்தி ருக்மணியை வைது புத்தி புகட்டினர். "எனக்கு இருக்கிற புத்தி போதும்—இன்னும் பத்தெட்டு பேருக்குச் செலவிடவும் ஆகும்—உங்கள் புத்தியை உங்களை வேண்டிக்கொள்கிறவர்களுக்குக் கொடுங்கள்" என்ருள் ருக்மணி! இவ்வண்ணமாக அன்றிரவு கழிந்தது. எனது தாயார் தனது நகைகள் எதையும் பெட்டியில் வைத்து விட்டுச் செல்லவில்லை. எல்லாவித நகைகளையும் தரித்துக் கொண்டே சென்றுவிட்டமையின், ருக்மணி வேறு நகைகளின்றி கம்மல், சறடு இரண்டுடனேயே இருந்தாள். நான் மட்டும் பொன் காய்த்த மரம்போல ஸகல பூஷணுதிகளும் பொருந்த நின்றேன். ருக்மணியை—அவள் பெற்ருேருக்கு 200-ரூபாய் தந்து விவாகம் செய்துகொண்டு வந்ததால், எனது தந்தை என்னை நோக்கி—"ருக்மணி 200-ரூபாய்க்கு விலைக்கு வாங்கப் பட்டவள்—ஆனதால் அவளைப் பெயர் சொல்லியே கூப்பிடு"—எனக் கற்பித்து வைத்திருந்தார். நானும் ருக்மணி—என்றே அழைப்பது வழக்கம். தன்னைச் சிறியதாய் என்று கூப்பிடும்படி அவள் செய்த அதிகாரம் எதும் பலிக்கவில்லை. எனக்கும்,

### மாற்றந்தாயின் கொடுமைகள்

ஆரம்பமாயின. ஒருநாட் காலையில் ருக்மணி என்னிடத்து

வெகு அன்புடனும் ஸல்லாபித்து இரண்டு தினத்திற்கு எனது காசி மாலையைத் தான் அணிந்து அழகு பார்ப்பதாகக் கூற—"ஐயோ பாவம்! மகராஜியாகப் போட்டுக் கொள்"—என்று கொடுத்தேன். வாரமானது—மாதமுமானது. பல முறை தருமாறு வேண்டியும் கொடுத்தாளில்லை. "என்னை வெறுங் கழுத்துடன் இருக்கவிட்டு நீ காசுமாலையோடு நிற்பதோ?—நல்ல மரியாதை யிது"—என்று என்னையே எதிர்க்க ஆரம்பித்து அடிக்கவும் தொடங்கிக்கொண்டாள். என் பிதா இதனை யறிந்து—"அவளுடைய நகையை அவளுக்குக் கொடுத்துவிடு; இன்றைக்கு நீ உண்ணும் உணவு, கட்டுகிற சேலை எல்லாம் அவளுடையதே தவிர எனக்கென்று ஒரு காசும் சொந்தமில்லை"—என்று கூறினார். இதைச் செவியுற்ற ருக்மணிக்கு ஆத்திரம் அதிகமாயிற்று. "காசுமாலை போட்டுக்கொண்டிருப்பவளையும் அந்த விறட்டியில் தான் வைப்பார்கள்—இந்த வெறுங் கழுத்துக்காரியையும் அந்த விறட்டிகளில் தான் அடுக்குவார்கள்" எனக் கண்டபடி வைது காசுமாலையைக் கழற்றி எறிந்தாள். ஒரு தினத்திற்கு 10, 12, தடவை சண்டை சச்சரவுகள் தான். அக்கினிக்கொப்பான வார்த்தைகள் தான். நான் கோள் சொல்வதாக எண்ணவேண்டாம். என் முகம் பார்த்தளவிலேயே என் மாற்றாந் தாய்க்கு முகம் தீபாக்கினிபோல் படபடவென்று ஆவேசம் வந்துவிடும். மாற்றாந்தாய்—என்னை, நாசமாய்ப் போக, திக்கற்றவள், நாதியற்றவள், கவளசோற்றுக்கில்லாதவள், ஒரு படி அரிசி விழுங்குவாள், காதகி, சண்டாளி, இவளுக்கு எப்போது சாவு வருமோ, எப்போது அள்ளதுள்ள வாரிக்கொண்டு போவார்களோ, ஆணவம் எப்போது அடங்குமோ—கடவுள்தான் கூலி கொடுக்கவேண்டும் என்பாள். நான் ஒன்றும் பேசாமலே இருந்தாலும் மேற்சொன்ன வார்த்தைகளை அடிக்கடி 20-தடவையாகிலும் சொன்னால்தான் என் மாற்றாந் தாய்க்குத் திருப்தி ஏற்படும். நான் ஒன்றும் பேசவில்லையே! என் இப்படி என்னை வைகிறாய் என்றால், உன் புருஷன் வீட்டுக்குப் போகிறது தானே! இங்கே எத்தனை நாளைக்குத் தின்றுகொண்டிருக்க நினைத்திருக்

கிறாய் என்று புராணக் கதையைத் தொடங்கிவிடுகிறாள். இவற்றைச் சகியாமல் ஒரு தினம் மயக்கமாக விழுந்துவிட்டேன். என் மயக்கம் தெளிந்தபோது என் மாற்றாந்தாயின் பின்வரும் சொற்கள் என் செவியில் விழுந்தன;—ஆணவம் அழிந்துபோக, கொடுமை கொத்திப்போக, இவ்வளவிலேயே இப்படி இருக்கு; இன்னும் சரியாய் ஊரிலுள்ளவர்களைப் போலப் புருஷனோடு வாழ்ந்துவிட்டால் எது ஆளைப்பிடிக்க முடியாது. ஆணவத்திற்குத் தக்கபடி தான் சாமி அமைத்திருக்கிறார். கருமம் இந்த எழவோடு போர் கொடுக்க நேரம் சரியாய்ப் போகிறது என்றாள். இவ்வார்த்தைகளைக் கேட்டதும் மனம் ஸகியாது தேம்பித் தேம்பி அழுதேன். அதற்கு என் மாற்றாந்தாய்—ஏன் அழவேண்டும்! யார் என்ன செய்தார்கள்! இதென்ன கருமம்! நீயே உன் அப்பனோடு வாழ்ந்திரு! பிள்ளை பெற்றுக்கொள்ளு! நான் எங்கேயாவது போகிறேன். என்று சலித்துக்கொண்டது. இதைக் கேட்க எனக்குச் சிரிப்பும் வந்தது. அத்துடன் இரண்டாம்முறை மயக்கமானேன். எனக்கு மயக்கம் வந்ததற்கு இந்த விஷயமான நெருப்பு வார்த்தைகள் தானா சிகிச்சை? எனக்கு நேர்ந்த மயக்கம்—என் மாற்றாந் தாய்க்கு அது உண்மையான மயக்கமென்று நம்பகமில்லை. அதற்கநுசரணையான வார்த்தைகளும் என் செவியில் பட்டது. வீட்டில் எப்போதும் கலகம் தான். இப்படி சதா கலகம் உண்டாவதில் அதில் ஏதாவதொன்று சிந்தைக்குத் தென்பட்டு வாதிக்க, அதனால் நெஞ்சில் வலி அதிகமாகி எழுந்திருக்க, உட்காரவும் சில சமயங்களில் ஸக்தியற்றவளானேன்.

### என் தாயாரின் அருமை

எனக்கு இப்பொழுது தான் தெரிகிறது. என் மாதா இருந்தபோது எவரேனும் சிடுக்கென்று ஓர் வார்த்தை சொன்னால், என் தாயிடம் சென்று சொல்லி அழுவேன். மற்றவர் மேல் இருக்கப்பட்ட கோபத்தையெல்லாம் சேர்த்து அம்மாவைச் சிடுசிடுப்பேன். இப்போது எவரைச் சிடுசிடுப்பேன்? யார் தான் கேட்

பார்கள்? "தாயோடு போயிற்று பிறந்தகம்" என்ற பழமொழியும் என் விஷயத்தில், என் பிதா ஜீவிதராய் இருக்கும்போதே நிறைவேறத் தொடங்கிவிட்டது. எவ்வளவோ பயந்து, நடந்த போதிலும் தப்பிதம் எவ்விதமோ வந்துவிடுகிறது. இவையெல்லாம் நெஞ்சில் முள்போல் தைத்து வருத்துகின்றன. எனக்குச் சிறியோர்களும் பெரியோர்களுமாய் இருக்கிறவர்களெல்லாம் தமது தாயைப்பிரிந்தும்-இறக்கவும் கூடக்கொடுத்து-மனக்கிலேசமடைந்து, பின் ஒருவாறு தேறி சந்தோஷத்துடன் இருக்கவில்லையா? என்னவோ என் மனப்போக்கு இப்படியாக முடிந்து கஷ்டப்படுத்துகின்றது. இங்ஙனமாக விவரிக்கப்புகின் என் சஞ்சல சரித்திரம் வெகு விரிவு பெற்றுவிடு மாதலின் இவ்வளவில் சுருக்கி விடுகின்றேன். இது நிற்க, இரண்டாவது விவாகத்தின் பயனாக என் தந்தைக்கு ருக்மணியிடமாக ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு ஒரு கண், ஒரு கை இல்லை. பிறந்தது பெண் குழந்தையாதலின், என் தந்தைக்கு "ஆண்மகவு பிறக்கவில்லையே" என்ற அதிர்ப்தி மேலிட்டது." இனி மூன்றவது விவாகம் செய்துகொண்டால் அவசியம் ஆண்குழந்தை பிறக்கும்" என்று அவரது எதிர் வீட்டு நண்பர் அவரைப்பழித்தார். அப்பெண் பிறந்ததினத்தன்றே நானும் புஷ்பவதியானேன். ஐயோ! அவளையும் அவள் அழகையும் பார்த்துவிட்டு, குருபியான இக்குழந்தையை நோக்கினால் என் வயிறு கொதிக்கின்றதே" என்று ருக்மணி என் மீது பொறாமை கொண்டு பிரலாபித்தாள். நாளாக ஆக அந்த வியஸனமும் அவளுக்கு மாறிற்று. ருக்மணியின் குழந்தைக்கு "சௌந்தரவல்லி" என்று பெயரிட்டனர். ஆறு ஆண்டுகளும் இதனிடையே கழிந்துவிட்டன. என் தாயாரும் என் பர்த்தாவும் போனவழி தெரியவில்லை. அவர்கள் திரும்பவுமில்லை; கடிதங்களும் கிடையாது. எனது தாயார் "தமக்கு 'ஏழரைநாட்டுச் சனியன்' ஜாதகத்திலிருப்பதாயும், அது கழிந்த பிறகே ஊர் திரும்புவேனென்றும், இடையில் ஒருவரை யொருவர் சந்திப்பது க்ஷேமத்திற்குக் குறைவென்றும்" கண்டு ஒரு கடிதம் காசிக்குத் தாம் சென்ற ஆரம்பத்

தில் எனக்கு எழுதியிருந்தார்கள். அதன் பின்னர் அவ்விருவரின் செய்தி ஏதும் எட்டவில்லை. எனது தந்தை இந்த வியஸனத்தால் உள்ளுக்குள் உருகிக்கொண்டே வந்தார். ருக்மணியால் அவருக்கு எவ்வித சுகமுமில்லை. நாளுக்குநாள் அவளுடைய நிஷ்டூரங்கள் அதிகரித்துக்கொண்டே வந்தன. இத்தருணத்தில்,

அரவிந்தன்

என்று கையொப்பமிட்ட ஒரு கடிதம் எனக்குத் தபால் மார்க்கமாகக் கிடைத்தது. என் பெயருக்குத் தினசரிப் பத்திரிகையும் வார-மாதப்பத்திரிகைகளும் ஸதா வந்துகொண்டிருப்பது வழக்கமாதலின் அத்துடன் அக்கடிதமும் பெற்றேன். அதில் என் மீது காதலுற்றிருப்பதாகவும் — இஷ்டபூர்த்தி செய்யவேண்டுமென்றும்—ஊன்றியகாமம் எளிதில் தணியாதென்றும்—கண்டிருந்தது. இதுவும் தலைவிதியா என்று புலம்பிக்கொண்டு எனது பிதாவுக்கு அக்கடிதத்தைக் காண்பித்து அழுதேன். "நான் மறுவிவாகம் செய்துகொண்டதின் பலன்—உன்னை இப்படி—உனது தாயையும் உன் கணவனையும் பிரித்து அலைக்கழிக்கிறது"—என்று தமது முகத்தில் அறைந்துகொண்டு கதறினார். அன்றுதொட்டு எனது கஷ்டங்களை அவரிடத்தில் சொல்வதை விட்டுவிட்டேன். எவ்வளவு நிஷ்டூரங்கள் நேரிடினும் நான் அநுபவிக்க ஸம்மதமே. ஆனால், என் அருமைப் பிதாவின் கண்களிலிருந்து ஒரு துளி ஜலம் வருவதானால் அதைக் கண்டு நான் ஸகியேன்; என் ஆவியும் நில்லாது. இவ்விதம் எனக்கு நானே வாய்விட்டுச் சொல்லிக்கொண்டதை ருக்மணி கேட்டு முகத்தைச் சுளித்துக்கொண்டதைப் பலகணி வழியாகப் பார்த்தேன். என் பிதாவுக்கு நான் இனி ஏதுந் தெரிவியேன் என்பதை ருக்மணி அறிந்துகொண்டதும் இன்னும் அதிகமாக வருத்த ஆரம்பித்தாள். பெண்கள்,—அதிலும் ருதுவாகி, வீட்டிற்கு வெளியிற்செல்ல இயலாதிருக்கும் பெண்கள்,—மாற்றாந்தாய்களிடம் சிக்கிக்கொண்டால் அவர்கள் படும்பாடு ஜென்ம ஜென்மத்திற்குப் போதும். எனக்கு இதுகாறும் தனி

யிலை போட்டுவந்ததை நிறுத்தி என் பிதாவின் எச்சிலையில் உண்ணச்செய்தாள். என் பிதாவின் எச்சிலை அசங்கிதமாகக் கருதுவேனென்று அவளுக்கு எண்ணம். அவ்விதமே நானும் அதையுண்ணவில்லை. இதை என் பிதாவுக்குத் தெரிவித்தாள். அதற்கு அவர் இப்போது உன் எச்சிலும் என்னோடு கலந்திருப்பதால் தான் அவள் இப்பொழுது என் எச்சிலைப் புசியேனென்று சொல்லியிருப்பாள்—என்று கூறிக்கொண்டே என்னை வந்து கேட்க—நானும் ஆமாம் நீங்கள் சொல்லுகிற மாதிரிதான் என்றேன். அவர் சிரித்த முகத்துடன் வெளியிற்சென்று விட்டார். மறுநாள் தன் எச்சிலையில் சாதம் பரிமாறி அதை உண்ணச் சொன்னாள். நான் அந்த சாதத்தை வீட்டு நாய்க்கு வைத்துவிட்டு அந்த எச்சில் செவ்வனே போவதற்காக ஸோப்பைக் கொண்டு கைகளைக் கழுவிக் கொண்டேன். அதற்கு அவள் என்னை அடிக்க, அதற்காகத் தகப்பனார் அவளை யடிக்க, அன்று ஒரு பெருஞ்சண்டை நேர்ந்தது. அதற்கு அடுத்த வாரத்தில்,

## ஒரு வாலிப கனவான்

என்னை ரகசியத்தில் சந்தித்து, என் கதைகளைக் கேட்டுத் தனது வரலாறும் சிறிது தெரிவித்து, தான் காப்பதாக வாக்களித்தார். அவர் முகத்தை பார்த்தமாத்திரமே அவர் வார்த்தைகள் அவ்வளவும் உண்மையென்று என் மனதிற் பட்டுவிட்டது. என் தாயின் சாயல் அவரிடம் நன்றாக விளங்கியது. என் தந்தை மறுவிவாகம் செய்துகொண்ட காரணத்தால் — அக்கனவான் என் பிதாவை முற்றிலும் வெறுத்து, சந்தித்துப் பேசக்கூட விருப்பமில்லாமற் போனார். ஆகவே என் பிதாவை யறியாமல் ரகசியமாகவே என்னைத் தோட்டத்தில்—அந்தப் பக்கமுள்ள வழியாக வந்து சந்தித்துச் செல்வதானார். தன்னிடம் வந்து விடுமாறுங் கூறினார். "நீ புஷ்பவதியா யிருந்தாலும் விவாகமான பெண்ணாதலின் அதனால் வெளியில் வருவதிற் பாதகமில்லை;—என்னுடன் நீ வந்து விடுவதில் உலகத்தார் ஒன்றும் சொல்

லார்''—என்று என்னைத் தைரியப்படுத்தினர். அவர் சென்ற பின்பு — "அவர்தான் இனி நமக்குத் துணை — நமது காலத்தை அவர் வீட்டில் கழித்துவிடுவோம்—இங்கிருந்துகொண்டு இந்தச் சிறுமைகள் படமுடியாது''—என்று என் மட்டில் சொல்லிக் கொண்டேன். என் பேச்சுமுடிந்து திரும்பும்போது—ஏதோ காலடிசப்தம் உண்டானதால், யாரோ ஒற்றுக் கேட்டதாக ஊகித் துக்கொண்டேன். இதனிடையே பைராகிக் கூட்டத்துடனும்,

என் பர்த்தா

வந்து சேர்ந்தாரென்று ருக்மணி தெரிவித்தாள். ஆனல் பரஸ்பரம் நாங்கள் ஒருவரை யொருவர் சந்திக்கக் கூடாதென் றும், நவக்கிரக சாந்தி செய்யவேண்டு மென்றும் கூறினள். அதை எனது பிதாவும் உண்மைதான் என்று ஒப்புக்கொண் டார். முதலில் எனது பர்த்தாவுக்கும், ருக்மணியின் பெண்ணை நருபிக்கும் விவாகம் என்றும், அதன் பிறகே எனக்கு சாந்தி முகூர்த்தமென்றும் ருக்மணி எற்பாடுசெய்து வைத்துவிட்டாள். இது எனக்கு இடி விழுந்தது போலாயிற்று. என் தாயின் வயிற் றில் பிறந்த பெண்ணுக இருந்து, எனக்கு இளையவளாய் எனது பர்த்தாவை மணந்தால், அது எனக்கு சம்மதம்—சந்தோஷம்—திருப்தியாய் இருக்கும். எந்தவிதமும் நாங்கள் ஒருதாய் வயிற்றுப் பிள்ளையா யிருத்தலின் மனமொத்துப் போய்விடுவோம். இங்கோ ஆரம்பமுதல் விரோதி! எப்படி என் மனம் சம்மதிக்கும்? ஆனல் உலகத்தில் பெண்களின் விருப்பங்களை—அபிப்பிராயங் களை—இஷ்டத்தை—யார் கவனிக்கிறார்கள்? விக்டோரியா மகா ராணியார் ஜீவித்திருந்தாலும்—இதைப் பெண்ராஜ்ஜியம் என்று பெருமை பேசிக்கொள்ளலாம். அதற்கும் பெண்பாலார் கொடுத்து வைக்கா தொழிந்தனர்! இது நிற்க, ருக்மணியின் பெண்ணை சௌந்தரவல்லிக்கு—குரூபிக்கு—ஆறுவயது தானுயிற்று. எவரும் அவளை மணம் புரியாராதலின் என் பர்த்தாவைக் கழுவுக்கேற்ற கோழுட்டியாகக் கொண்டு இப்போதே சரிப்படுத்தி விடலா

மென்று ருக்மணி துணிந்தாள்போலும்! பெண்களின் ஸாகஸம் யாருக்கு வரும்! இவ்வண்ணம் இங்கு நிகழாநிற்ப, ஒருநாள் இரவு என் அறைக்கு ஒருவர் வந்தார். தானே அரவிந்தனென்றும், தன்னுடைய காதற் கடிதத்தை மறுத்துவிட்டுத் தகப்பனுர் பரியந்தம் எட்டவிட்டதற்குப்

## பழிக்குப் பழி

வாங்கத் தயாரா யிருப்பதாயும், ருக்மணி தன் பெண்ணை மணப்பதாயின், லக்ஷ்மீகாந்தத்தையும் (அதுதான் என் பெயர்) உனக்கே கொடுத்து, "அவள்—புருஷனே நீ"— என்று எல்லோரையும் நம்பவைத்து விடுவதாகக் கூறியதாயும், அதன்படியே தானும் ஒப்பி, தன்னையே லக்ஷ்மீகாந்தத்தின் **உண்மையான நாயகன்** போலவும், பைராகி கூட்டத்தில் தன்னை மற்றவர்கள் கண்டு பிடித்து இழுப்பது போலவும் நடிக்க ஏற்பாடுகள் செய்து, நண்பர்கள் என்று பலரைக் கூலிக்கு அதற்காகத் திட்டம் செய்து வைத்துவிட்டு, ஸமீபத்தில் அவ்வழி வந்த பைராகிக் கூட்டத்துடன் கலந்து தான் இவ்வூர் வர; முன்னேற்பாட்டின்படி கூலிக்குத் தயாரித்த நண்பர்கள், தன்னை லக்ஷ்மீகாந்தத்தின் புருஷன் என்றுகூறி மடிபிடித்திழுக்க, தான் வர இணங்காததுபோல் காட்ட, உடனே அப்போலி நண்பர்கள் ருக்மணிக்கும் என் பிதாவுக்கும் இது தெரிவிக்க—யாவரும் ஒருங்குகூடித் தன்னையழைத்து வந்துவிட்டன ரென்பதாயும் என்னிடம் கூறினுர். நான் திடுக்கிட்டேன். பின்னும் என்னைநோக்கி, அவர் கூறலுற்ரூர். என்னைக் கண்டதும் உன் தந்தை உன் தாயைப்பற்றி விசாரித்தார். அடுத்த மாசம் வருவார்களென்றும், காஞ்சீபுரத்திலிருப்பதாகவும் நான் கூறியதை உன் பிதா நம்பிவிட்டார். "உன் புருஷனைப் பார்த்து ஆறு வருடங்கள்போல் ஆனதால் என்னையே உன் நாயகன் என்று உன் பிதா உத்தேசித்துக்கொண்டார். இரண்டு தினத்தில் சௌந்தரவல்லிக்கும் எனக்கும் முன்னேற்பாட்டின்படி விவாகம் நடக்கும். அதற்கு மூன்ரும்நாள் உனக்கும் எனக்

கும் பகிரங்கமாக சாந்திமுகூர்த்தம் நடக்கும். இப்போது நீ யாது செய்வாய்? என் அத்தையான ருக்மணியின் தூண்டுதலால்தான் உனக்கு முதலில் நான் கடிதம் எழுதினேன். ருக்மணியின் பலம் எனக்கு இருக்கும்போது உன்னை லக்ஷ்யம் செய்வானேன்?'' என்றார். அந்தப் பரமசண்டாளன் என் அறையைவிட்டு நீங்கினால் போதுமென்று அப்போது எனக்கு இருந்தது. ஒருக்கால் நான் வெளியிற் செல்ல நினைத்தும்—இப்படியிரு லக்ஷ்மீகாந்தம்-என்று என் கையைப் பிடித்துவிட்டால் பெண்பாலாகிய யான் யாது செய்வேன்? போதும் போதும் அந்த சமயம் என் மனம் பட்டபாடு! தன் மகளுக்கு விவாகம்செய்து வைப்பதின் நிமித்தமாக ருக்மணி இவ்வளவும் செய்திருக்கிறாளென்று தெரிந்து கொண்டேன். இதை என் பிதாவுக்கு எப்படித் தெரிவிப்பது? இவ்விதமாக நான் யோசனையிலாழ்ந்திருக்குங்கால் ருக்மணியும் அங்கு வந்து, அவளும் அரவிந்தனுமாக என்னை நோக்கி—“இச்செய்திகள் யாதேனும் வெளிப்படின் உடனே கொலைதான்'' என்று எச்சரித்து அச்சுறுத்தித் தம் ஊக்கத்தின் ஆழத்தைக் காட்டினாள். எனக்குச் செய்வதின்னதென்று தோன்றவில்லை. அரவிந்தன் என் பர்த்தாவின் சாயலையே பெரும்பான்மையும் ஒட்டிநின்றதால் தந்தையும் இவர்களின் ஏமாற்றத்தில் மயங்கினார். இவ்விதநிலையில் எனக்கும் மேலே தெரிவித்த வாலிப கனவானுக்கும்,

### மறுபடியும் சந்திப்பு

நேர ரகசியமாக ஒருவரையொருவர் கண்டுகொண்டோம். அத்தருணத்தில் எங்கிருந்தோ ஒரு சப்தம் உண்டாயிற்று. “ஹா எத்தனை புருஷர்களப்பா இவளுக்கு! சொந்த நாயகன் ஒன்று, அரவிந்தன் இரண்டோ! என்பதாக யாரோ பேசுவதுபோற் கேட்டது. ஆனால் எவரும் தென்படவில்லை. வாலிப கனவான் என்னை நோக்கி—“என் கண்ணீர் விடுகின்றாய்? நாயகன்தான் வந்துவிட்டனனே, நெடுநாட்கவலை ஒய்ந்ததன்றோ'' என்றார். அதற்கு நான் வந்தவர் என் பிராணநாதரன்று; அவன் அரவிந்தன் என்றேன்.

அதற்கு அவர் :—“ஆனால் பைராகி கூட்டத்திலன்றி, அரவிந்தனை ஏற்கெனவே சந்தித்திருக்கின்றாயா ?”

நான் :—“ அவன் கடிதத்தைச் சந்தித்திருக்கின்றேன். என்னைக் காதலித்ததாக ருக்மணியின் தூண்டுதலால் நிருபமொன்றும் விடுத்தான். ருக்மணி அவனுக்கு எங்கேயோ ஒரு தூர சுற்றத்தில் அத்தையாக வேண்டுமாம். சகலமும் அவனே நேரில் கூறினான்-” என்று நிகழ்ந்ததனைத்தும் நவின்றேன். அதற்கு,

அவர் :—“அப்படியா செய்தி! நல்லதாகட்டும். என் துணையை நம்பு. நானும் ஒரு அந்தரங்கம் ஊகித்துக்கொண்டிருக்கிறேன். இந்த வீதிக்கு அடுத்த தெருவில் தாடியும் மீசையும் அகோரமாக முளைத்து உருமாறிய ஒருவர் மூன்று நாட்களாக இந்த வீட்டை ரகசியமாகச் சுற்றிச் சுற்றிச் நிற்கிறார். சிறிது பைத்தியமும் உண்டென்று படுகிறது. நீ பார்த்திருக்கிறாயா ?”

நான் :—“ இல்லை, அதைப்பற்றி இப்போதென்ன ?”

அவர் :—“அவன் உன் கணவன்போலும் இருக்கிறான். என்னைக் கண்டால் மறைந்துவிடுகிறான். குலசேகரனை நான் சிறுபோதில் பார்த்திருப்பதால் அந்த ஞாபகம் சற்றே இருக்கிறது. பிறகு நான் இரங்கூன் சென்று இத்தனை வருஷங்களுக்குப் பிறகு இங்கு வந்தவனாயிருந்தாலும், அந்தப் பழைய ஞாபகம் என் மனத்தைவிட்டு மாறாமையால் அவன் குலசேகரனாகவே இருக்கவேண்டுமென்பது என் துணிபு !”

நான் :—“ எனது பாத்தாவை நான் பார்த்த மாத்திரத்தில் தெரிந்துகொள்ள முடியும். ஆயினும் அவரும் நானுமாக ஓர் காலம் மகிழ்ந்த அச் சிறுபருவ விளையாடல்களை அவர் ஒன்றேனும் விட்டுவிடாமல் வரிசைக் கிரமமாகப் பாடம் ஒப்புவிக்க வேண்டும். அவரது இரு புருவங்களிலும் காயவடுக்கள் இருக்க வேண்டும். இடது முதுகில் அவருக்குப் புலப்படாத ஒரு மச்சமும் இருக்கவேண்டும். அவரது படம் ஒன்றும் என்பால் உளது. இதனால் நாம் அவரைப் பரீக்ஷித்தறியலாம் ”

இவ்விதமான எங்களிருவாது சம்பாஷணைகளின் இடையே, தோட்டத்துவழியாக ஒருவர் உட்புகுந்து நாங்கள் இருக்கும் இடத்தைக் கிட்டினர். வாலிப கனவான் அவரைப் பார்த்து "குலசேகரா! ஏனப்பா இந்த வேஷம்? மூன்று தினங்களாக ஒழிந்துகொண்டு திரிகின்றாயே, என் கண்ணெதிர்ப்படுந் தருணமெல்லாம் மறைந்துகொள்வானேன்?" என்றார். எனக்கோ அவரைக் கண்ட மாத்திரத்தில் அவர்தான் ஆர்வமுள்ள

என் பர்த்தா

என்று தெரிந்துவிட்டது. கஷ்டமும் சுகமும் கலந்ததே இவ்வுலகு. அவரை நான் பலவித கேள்விகள் கேட்டறிந்த பின்பே எனது கணவர் என்று நான் நிச்சயிப்பேனென்பதாக முன்பு கூறியவனைத்தும் வெறுஞ் சொல்லளவாகவே முடிந்தன. என்னதான் உருமாறினாலும் பெற்ற தாய்க்குத் தன் மக்களையும், வாழ்க்கைப்பட்ட ஒரு பெண்ணுக்குத் தன்னை மாலையிட்ட கணவனையும் தெரியாமற் போமா? அமாவாசை இருட்டிலுங்கூட—ஸ்பரிச மாத்திரத்தால்—நன்றாகத் தெரிந்துகொண்டு விடலாம். உடனே அவரை நமஸ்கரித்து, அவரது கைகளை என் கண்களில் ஒற்றிக்கொண்டு ஆநந்ததிசையானேன். பிறகு என் தாயார் எங்கேயென்று திடுக்கிட்ட பார்வையுடனும் கலங்கிய மனத்துடனும் கேட்டேன். அதற்கு எனது பர்த்தா வாலிப கனவானை நோக்கி—"தாங்கள் என்னை அத்துணை உறுதியுடனும் தெரிந்துகொள்ளும்படியாக நான் இல்லாமல் முகம் மாறிப் போயிருந்தபோதிலும்—உங்கள் முகம் சற்றேனும் வேறுபடவில்லையே; பார்த்தளவிலேயே—**ரங்கபாஷியம்** என்று தெரிகின்றதே"—என்பதாகக் கூறினர். வாலிப கனவானின் திருநாமத்தினை அப்போதுதான் அறிந்தேன். அவர் தமது பெயரை எனக்குத் தெரிவிக்காமல் "**வாலிப கனவான்**" என்பதே தமது பெயரென்று என்னைச் சந்தித்த ஆரம்பத்தில் கூறினர். என் அவ்விதம் மறைத்துப் பேசினீர்களென்பதற்கு, தனது உண்மைப் பெயரைத் தெரி

வித்தால், ஒரு சமயம் என்னால் அது என் தந்தைக்கு எட்டிவிடு மென்றும், பிறகு ஒரு சமயம் என் தந்தையைச் சந்திக்கவேண்டிய கட்டாயம் நேரிடுமென்றும், ஆகவே என்னை நம்பாத காரணத்தால் அவர் தமது பெயரை வெளியிடவில்லையென்றும் தெரிந்தது. என் தந்தையை அவர் சந்திக்க மனமொப்பாத காரணம் என் தாய் உயிருடனிருக்க, முறட்டுத்தனமாக ருக்மணியை மணந்தாரே என்ற அருவெறுப்பினால்தான். அது நிற்க, என் பர்த்தா தம்மைப் பற்றிய சகல விவரங்களும் நவின்றார். எனது தாயார் காசியில் எவ்விதமே வழி தவறிவிட்டதாயும், தெய்வச் செயலாக ஒருவரை யொருவர் பிரிந்து தப்பிப்போக, இதுநாள் வரையும் தேடித்தேடி அலுத்து இப்போது தான் இந்த ஊர் வந்ததாயும், இங்கு ஒரு சமயம் தனக்கு முன் வந்திருக்கலாமென்று நம்பியதும்கூட வீணாகி விட்டதாயும், ரங்கபாஷியத்தைக் கண்டபோதெல்லாம் தாம் மறைந்துகொண்டதின் காரணம், தான் என் தாயாருடன் ஊர் வாராததால், தாயாரின் நகைகளை யபகரித்துக்கொண்டு தான் கொலையோ யென்னவோ செய்துவிட்டதாக வித்தியாசத் தோற்றம் எங்கு ஏற்பட்டுவிடுகின்றதோ வென்ற அச்சத்தினாலேதா னென்றும், அதை உத்தேசித்தே எனது தந்தையின் இல்லத் திற்கு வரவோ—எனது தந்தையைக் காணவோ அஞ்சினதாயும்—அதன்மேல் தோட்டத்தின் வழியாக உட்புகுந்து மறைந்திருக்கும் சமயம், ரங்கபாஷியமும் நானும் முதன்முதலாக ஒருவரை யொருவர் சந்தித்து என் கஷ்டங்களை அவரிடம் நான் சொல்லிக்கொண் டிருந்தவைகளைக் கேட்டதாயும், கடைசியில் நான் சந்தேகித்த காலடி சப்தம் தன்னுடையதே யென்றும். பிறகு மறுநாள் ரங்க பாஷியத்துடன் நான் பேசிக்கொண்டிருக்குந் தருணம்—“ஹா எத்தனை புருஷர்களப்பா இவளுக்கு! சொந்த நாயகன் ஒன்று, அரவிந்தன் இரண்டோ!” என்று கூறியது அங்கு மறைந்து நின்ற தான்தானென்றும் கூறினார். அதற்கு ரங்கபாஷியம்—வாலிப கணவான்—தமக்கு என் தாயாரிடமிருந்து கடிதம் வந்திருக்கிற தென்றும், இப்போது அயோத்தியில் இருப்பதாகவும், குலசேக

ரன் கூட்டத்தில் வழிதப்பி விட்டானாதலின் அவன் வந்து சேர்ந்த விவர க்ஷேமம் தெரிவிக்கவேண்டுமென்றும் லக்ஷ்மீகாந்தத்துக்கு அருமை முத்தங்கள் சொல்லும்படியாகவும், அயோத்தி விலாஸத்துடனும் எழுதியிருப்பதாக இயம்பினர். ஏககாலத்தில் தாயின் செய்தியும் பர்த்தாவின் தரிசனமும் பெற்ற எனது பெருமகிழ்ச்சியை என்னென்பேன்! பின்னர்,

### சில முன்னேற்பாடு

இளை ரங்கபாஷியம் விவரித்தார். அதன்படியே எனக்கு சாந்தி முகூர்த்தம் ஏற்படுத்தியிருக்கிற தினத்தன்று நானும் என் பர்த்தாவும் ஓடிவிடுவதென்று தீர்மானித்துக்கொண்டோம். எவ்விதத்திலேனும் துநுபிக்கு அரவிந்தன் ஒரு தாலிகட்டிவிட்டால் நல்லது என்பது என்னுடையவும் ரங்கபாஷியத்தினுடையவும் அபிப்பிராயமாதலால் அதுவரை காத்திருந்தோம். ரங்கபாஷியம் எங்களைச் சென்னையில் வைத்தியநாதமுதலி தெருவில் நான்காம் இலக்கமுள்ள வீட்டிற்கு வந்து சேரும்படி தெரிவித்துவிட்டு, அன்று மெயிலில் ஏறிச் சென்னைக்குச் செல்வாராயினர். என் பிதாவை அவர் சந்திக்காமலே சென்றாரென்று மீண்டும் தெரிவிக்கவேண்டியதில்லை. துநுபிக்கு மறுநாள் விவாகமும் நடந்தேறிற்று. அரவிந்தன் நாயகனானன். எனது சாந்திதினமும் வந்தது. இரவும் நெருங்கியது. நான் தரித்திருந்த நகைகளின் மொத்த மதிப்பு பன்னீராயிரம் ரூபாய் ஆகலாம். அந்த நகைகளுடனும் தோட்டத்திற்குச்சென்று, அங்கு ஏற்கெனவே காத்திருந்த எனது பர்த்தாவுடனும் ரயிலேறி நேராக செங்கற்பட்டுக்குப் பிரயாணமானோம். அங்கு தங்கி மறைந்து கால்நடையாகச் சென்னை சென்றுவிட எங்களது எண்ணம். செங்கற்பட்டு ஜங்கிஷனுக்கு வந்தபோது காலைப் பொழுதாகிவிட்டது. போலீஸார் எனது பர்த்தாவின் தாடி மீசை வேஷத்தையும், ஸர்வாபரணபூஷிதையான என்னையுங் கண்டு—எங்கிருந்தோ என்னை அடித்துக்கொண்டு கம்பிநீட்டுவதாகச் சம்ஸயித்தனர், அதனால் என் பர்த்தாவைப் பொட்ட

கிராப் பிடிக்கவும், விவரங்கள் குறித்துக்கொள்ளவும் துணிந்தனர். நாங்கள் எவ்விதத்திலேனும் தப்புவித்துக்கொண்டு சென்றுவிட எண்ணி—அதற்கெல்லாம் ஒப்பினேம். பிறகு செங்கற்பட்டில் இறங்கி, அங்கிருந்தால் அகப்பட்டுக்கொள்வோம் என்றெண்ணி பல்லாவரத்திற்குக் கட்டைவண்டியில் ஏறிஅவ்வூரையடைந்தோம். வண்டியில் வந்த அலுப்பால் அவ்விடம் இரண்டு தினங்கள் போல் தாமதித்துப் பிறகு சென்னை செல்லலாம் என்றெண்ணி அங்கு ஒரு 'காபிகிளப்' பில் ஜாகை வைத்துக்கொண்டோம். நாங்கள் வருவதற்குமுதல் தினத்தன்று தானே அந்தக் கிளப்பிலேயே இடம் வைத்துக்கொண்டு தங்கியிருந்த,

விஜயநாதன்

என்பவனுக்கும் எனது பர்த்தாவுக்கும் பரிச்சயமாயிற்று. வெகு சாமர்த்தியமாய் விசாரித்து எங்கள் வரலாறுகளையும் தெரிந்து கொண்டான். எங்களுக்காக வேறோர் வீடும் அமர்த்தி அதில் எங்களை இருக்கச் செய்தான். அந்த இடம் மிக்க சௌகரியமாயும் இருந்தது. மறுதினம் காலை எனது பர்த்தா சென்னைக்குப் புறப்பட்டுச் சென்று ரங்கபாஷியத்துடன் திரும்பி வருவதாகப் புகன்று சென்றார். அன்று பகல் 12-மணிக்கு விஜயநாதன் என்னை யணுகி, போலீஸார் தேடிக் கொண்டு வந்திருப்பதாயும், நான் தரித்துள்ள நகைகளைக் கழற்றி ஒரு மூட்டையாகக் கட்டிவிடும்படி என் பர்த்தா எனக்குத் தந்தி கொடுத்திருப்பதாகவும் கூறி ஒரு பொய்த் தந்தியைக் காண்பித்தான். அதையும் நான் உண்மையென நம்பினேன். அவ்விதமே நகைகள் அனைத்தையும் கழற்றி ஒரு வஸ்திரத்தில் சுற்றி பத்திரப் படுத்திவைத்தேன். விஜயநாதன் அந்த வீட்டில் இராமல் சிலநாள் வரைக்கும் சைதாப்பேட்டையில் இருந்தால் நல்லதென்று கூற நானும் ஒப்பினேன். நகைமூட்டையோடும் புறப்பட்ட என்னை நகைகளைத் தன்னிடம் கொடுத்துவைக்கும்படி விஜயநாதன் கூற அவ்விதமேசெய்து, என் பர்த்தாவைச் சந்திக்கவேண்டி அவனோடு

பிரயாணமானேன். அவன் ஒரு பெரிய தகரப்பெட்டியை உடன் கொண்டுவந்திருந்தான். அதற்குள் நமது நகைகள் இருக்கிற தென்று நம்பிக்கொண்டேன். அவன் குடி மயக்கத்தில் சற்று கண் மூடியபோது அவன் சாவியால் அப்பெட்டியைத் திறந்ததில் அது வெறும் காலியாக இருந்தது. இதென்ன மோசம் என்று திகைத்தேன். நானோ பெண்பால்! என்ன செய்வேன்? இவன் நமது கையை விட்டுத் தப்பிவிடுவானு—பார்த்துக்கொள்ளலா மென்றிருந்தேன். சாதாரணமாகப் பெண்பாலாருக்கு இந்த அசட்டுத் தைரியம்தான் அதிகம். அதனாலேயே அவர்கள் கெடுக்கிறார்கள். அதில் நானும் ஒருத்தியே! கடைசியில் சைதாபேட்டை வந்தோம். அங்கோரிடத்தில் என்னை இருக்கவிட்டு வெளியிற் சென்ற விஜயநாதன் அன்று மாலையில் திரும்பினான். எனது கணவர் சென்னையில் கப்பலில் இருப்பதாயும், கப்பல் மார்க்கமாய்ப் பம்பாய் செல்ல உத்தேசித்து என்னை யழைத்துவரச் சொன்னதாகவும், எனது நகை மூட்டையை அவர் வசம் ஒப்புவித்தானதென்றும் கூறி, மறுநாட் காலையில் என்னை இட்டுச் சென்று ஓரிடத்தில் இருக்கச் செய்தான். அது "கூலி டிப்போ" வென்று இப்பொழுது தெரிகிறது. வழி தவறிப்போகும் மாதர்கள் என்னைப்போல எவரிடமும் அகப்பட்டுக்கொள்ளாதிருக்கப் பிரயத்தனப்படுங்கள். கடைசியில் ஒரு கூட்டத்தாருடன் நானும் கப்பலில் ஏற்றப்பட்டேன். ஐயோ! அநாதையாகிய நான் மாற்றுந்தாய்க் கொடுமை காரணமாக வெளியேறி, விஜயநாத சண்டாளப் பிரசண்டனிடம் சிக்கி, என் ஆபரணங்களெல்லாம் இழந்து, என் பிரிய பர்த்தாவையும் பிரிந்து, எனது ஜென்ம பூமியையும் துறந்து, கூலியாளாக ஏற்றுமதியாகி இந்த நெட்டால் தேசத்திற்கு வந்து, இங்கு என்னை அடிமை கொண்ட ஐரோப்பிய துரையைக்கண்டு அவர் காலில் வீழ்ந்து புலம்பினேன்! அவருக்கு என் பாஷை தெரியவில்லை. ஆயினும் என் விஷயமாய் மனம் இளகி பரிபூரண கருணை காட்டினார். என்னை என் இஷ்டப்படி இருந்து கொள்ளும்படியும், எவ்வித வேலையும் செய்யவேண்டிய

தில்லை என்றும், ஜாடைப் பேச்சுகளால் தெரிவித்து எனக்குத் துணையாக,

### ஒரு ஹிந்துப் பெண்

ணையும் கொடுத் துதவினார். ஹா! என்ன ஆச்சரியம்!! இந்த நெட்டாலிலும்கூட விஜயநாதனின் பேர் கேட்கும்படியானேன். எனக்குத் துணையாக உதவப்பட்ட ஹிந்துப் பெண் தனது கதையைத் தெரிவித்ததிலிருந்து, அவள் விஜயநாதனுக்கு வாழ்க்கைப்பட்ட தாலி கட்டிய மனைவி என்றும், தான் அழகில்லையென்று அவன் இரண்டாவது விவாகம் செய்துகொள்ள முயன்றதைத் தான் தடுக்க, அதன்மேல் தன்னை எவ்விதமேனும் தொலைத்துவிடக் கருதி, வகைமோசமாக ஏமாற்றி இப்படி நெட்டாலுக்கு அனுப்பிவிட்டதாயும் அவள் சொல்லத் தெரிந்து பிரமித்தேன்! ஹா! உலகம்-கலகம் என்பார்கள். பெண்களைக் கலகத்திற்குக் காரணமாகச் சொல்லுகிறார்கள். பெண்கள் இருப்பிடம் பெருஞ்சண்டை என்கிறார்கள். இந்தப் பெண்களைவிடப் பெரும் மோசக்காரர்களாய் ஆங்காங்கு பல புருடர்கள் இருந்துகொண்டு எங்களைப்போன்ற பேதைகளைப் படுத்துவிக்கும் பாட்டை என்னென்றெடுத்து இயம்புவது? பகவானே! உனக்கே அற்புதம்!! என் பர்த்தாவின் கதி யாதாயிற்றோ! அவரை விஜயநாதன் எதுசெய்தானோ? ஒன்றுமே தெரிகிலேன். ரங்கபாஷியம் எங்களுக்குச் சொன்னவிதம் வேறு. நாங்கள் நடந்துகொண்ட வகை வேறு. நாங்கள் இருவரும் சென்னையில் அவரது இருப்பிடத்துக்கு வந்துவிட்டால், பிறகு என் தந்தையோ போலீஸாரோ தேடிவரும்போது, என் பர்த்தாவை எனது உண்மைக் கணவர் என்பதை நிரூபித்து அரவிந்தனைப் போலீஸார் வசமாக்கலாம் என்றார். அந்தவிதமாக நடந்திருந்தால் எனக்கு இந்தத் துர்க்கதி சம்பவித்திராது. செங்கற்பட்டு என்ற ஊர் சென்னைக்கு அருகே தானாதலால் அங்கு இறங்கி, எவர் கண்ணுக்கும் தென்படாது மறைந்து சென்னை சேர எனது பர்த்தா கருதினார். பல்லாவரத்திலிருந்த என்னை உடனழைத்

துச்செல்ல போலீஸ் பயத்தால் பின்வாங்கி ரங்கபாஷியத்தை அழைத்து வந்து, அவர் வசம் என்னை ஒப்புவித்து சென்னைக்கு அனுப்பிப் பிறகு தானும்தொடர்ந்து வந்துவிடக் கருதிச் சென்னை சென்றூர். அந்தோ!

என் ஜென்மபூமியை

என்று நான் காண்பேன்! அந்தப் பாக்கியமும் எனக்கு லபிக்குமா? அலை வீசி யெறியும் அகன்ற நீர்மலி நதிகள். நதியோரத்திலே நந்தனப் பூஞ் சோலையைப் பழிக்கும் உபவனங்கள்: அவற்றின்கண்ணே அபூர்வமான சிற்பவேலை செய்யப் பெற்று, சிறந்து விளங்கும் ஆகாயத்தை யளாவிய ரத்ந கசித மான சலவைக் கல் மாளிகைகள்: அவற்றின் அருகே பக்கத்திலும், எதிர் முகத்திலும், பின்புறத்திலும் இடிந்துவிழும் சுவரும், ஒடிந்துசாயும் கூரையுமுடைய குடிசையின் வரிசைகள்: அவற்றிற் குடியிருக்கும் மெலிந்த உடலோடும், கிழிந்த கந்தையோடும் யுக யுகாந்தரமாக உள்ளத்திலுள்ள சகலவித நல்லாசைகளும் அழிந்து, எக்கங்கொண்டு வாடிய வதநத்தோடும் விளங்கும் கிழவர் கிழவியர்; சிறுவர் சிறுமியர்; இடையிடையே ஒத்த நடையும் உடலும் உடைய ஆடுமாடுகள்; நாற்புறத்தும் அழுக்கும் குப்பையும் நிறைந்த மண்மேடு.—இதுவே எனது பாதகண்டத்தின் தற்காலத்திய நிலை. நான் எனது நாட்டை விட்டு இவ்விடத்திற்குப் புறப்பட்டு வந்தபோ திருந்த நிலையும்—இதுவே.

உப்பரிக்கையின் பக்கத்திலே இடிந்த குடிசைகள்; தேவாலயத்தின் பக்கத்திலே உயர்ந்த குப்பை மேடுகள்; பட்டுப் பீதாம்பரம் அணிந்து பகட்டாய்த் திரியும் செல்வவான்கள் பக்கத்திலே நடந்து செல்லும் கோவணாண்டிகள்; வயிறு வெடிக்க விலாப்புடைக்கத் தின்று இறுமாந்திருக்கும் சீமானைக் கண்டு, பசியால் நலிந்த வறியோர் தமது ஒளி குன்றிய கண்ணைத் திறந்து பார்க்கும் பரிதாபப் பார்வை;—இதுவே எனது ஜென்ம பூமி.

அந்த எனது சொந்த தேசத்துக்கு — எனது ஜென்ம பூமிக்கு—தாய்த்திரு நாட்டிற்குப்—போய்ச் சேரவேண்டுமென்ற அவா எனக்கு அதிகரித்து நிற்கின்றது. இந்தியாவி லிருந்தும் அநேக மாணவர்கள் லண்டனுக்குக் கல்வி பயில வருவதாகக் கேட்டுள்ளேன். அவர்கள் யாவரேனும் எனக்குத் துணையாக இருந்து என்னை இந்தியாவுக்கு அழைத்துச் செல்வதானால் வெகு உபகாரமாகும்—கால சகாயமுமாம். என் கஷ்டகாலத்திற்கு இந்நிருபத்தால் யாதேனும் பரிகாரம் ஏற்படமாட்டாதா வெனக் கருதியே, நான் இங்கு வந்த பின் கற்றுக்கொண்ட கொச்சையான ஆங்கிலத்தில் இதனை வரைந்து விடுத்துள்ளேன். லண்டனிலுள்ள எனது இந்திய ஸகோதரர்களின் கருணையை இவ்விஷயத்தில் ஆவலுடனும் எதிர்பார்த்து நிற்கும் யாருமற்ற அநாதையான,

லக்ஷ்மீகாந்தம்,

தபால் பெட்டி நெம்பர் 4706. மெக்டானல் தெரு.

நெட்டால்: தென்னுப்பிரிக்கா.

குறிப்பு :—மற்றப் பத்திராதிபர்களும் இந்த நிருபத்தைத் தங்கள் பத்திரிகைகளில் பிரஸித்தப் படுத்தவேண்டுமென்பது எனது அன்பான விக்ஞாபனம்.

லக்ஷ்மீகாந்தம்.

*** *** ***

இக்கடிதத்தை வாசிக்குங்கால் எவர் மனம் தான் உருகாது. கிருஷ்ணமூர்த்திப் பிரபு கண்ணீர் தாரைதாரையாக வடியவிட்டார். அத்தருணம் தமது தந்தையார் அங்கு வந்ததால் கண்களைத் துடைத்துக் கொண்டார். அன்றைய பத்திரிகையை அவர் பார்வைக்கு அகப்படாதபடி மறைத்து, அந்த தினத்துப் பத்திரிகையைப் படிக்கவில்லையே என்ற ஞாபகமே அவருக்குத் தோன்றாதபடி, வேறு பல விஷயங்களைப்பற்றியும் அவருடன் பேசிக்கொண்டிருந்தார். பிறகு இருவரும் புசித்து நித்திரைக்குச் சென்றனர்.

இது நடந்த ஒரு மாதத்திற்குப் பிறகு ஒரு நாள் கிருஷ்ண மூர்த்தியும் அவரது பிதாவும் உள் அறையில் உட்கார்ந்திருக் கும் சமயம், — நெட்டாலிலிருந்து திரும்பிய நோயலேயும் அவனுடன் இரு பெண்களையுங் கண்டார். லக்ஷ்மீகாந்தத்தைக் கிருஷ்ணமூர்த்தி கண்ணுற்றதும் அவருக்குத் தமது மாதாவின் ஞாபகம் தோன்றிப் பெரிதும் கலங்கி சிந்தை தடுமாறினர். அத் தருணம் அவரது தந்தை வெளியில் வரவும்— லக்ஷ்மீகாந்தம் அவருக்கு முன்பாக எதிர்ப்படவும்—அவர் விலவிலத்து நின்றுக் கீழே வீழ்ந்தார். லக்ஷ்மீகாந்தமோ ஆவேசத்துடனும், அடக் கொணுத அழுகையுடனும் கதறிக்கொண்டு— "ஹா எனது அருமைத் தந்தாய்!"— என்று அவர் மீது வீழ்ந்துப் புலம்பி மூர்ச்சை போயினுள். கிருஷ்ணமூர்த்திக்கு ஒன்றும் தோன்ற வில்லை. இவற்றை யெல்லாம் கவனித்துக்கொண்டு பிரமை மேலிட்டவளாய் விஜயநாதனின் மனைவி ஒரு புறமாய் ஒதுங்கி நின்றாள். பெரியவர் எழுந்து மனது தேறி பகவானை ஸ்துதி செய்து, மூர்ச்சை போய்க் கிடக்கும் லக்ஷ்மீகாந்தத்தைத் தமது மடிமீது சாயவைத்துக்கொண்டு தாரை தாரையாய்க் கண்ணீர் சொறிந்தார். அடிக்கடி முத்தமிட்டுக் கொண்டார். ஹா! பிதாவின் அன்புதான் என்னே! தாயின் அன்பு வெளியில் அடிக்கடி வந்து விடக்கூடியது. தந்தையின் அன்போ மனதிற்குள்ளாகவே மறைந்து நின்று மக்களைத் திருத்தும் வகையில்—அவர்களை முன்னுக்குக் கொண்டுவரும் வழியில் உபயோகப்படக்கூடியது. பெரியவர் லக்ஷ்மீகாந்தத்தின் கைகால்களைப் பிசைந்து கொடுத்து அம்மா! என் கண்மணீ! என் அருமைப் புத்திரீ! குழந்தாய்! உன் கதியும் இப்படி யாயினதா? ஐயோ! நான் மறு விவாகம் செய்யா திருப்பே னேல் இவ்வளவு துன்பமும் நேர்ந்திராவே! என்று பிரலாபித் தார். பின்பு கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்து, அப்பா! அன்றைய தினத்து "ஆநந்தா" பத்திரிகையைப் பார்க்கவில்லை யென்று மறு தினம் கேட்டு வற்புறுத்தியதின் மேல் மிக்க சஞ்சலத்துடன் என் னிடம் தந்தாயல்லவா? அதில் லக்ஷ்மீகாந்தத்தின் கடிதத்தைப்

பார்த்ததும்—அது என்னைப் பற்றிய கதையே என்று உனக்குக் கூறி லக்ஷ்மீகாந்தம் உன் தமக்கையே என்றேன். இப்பொழுது அவ்வளவும் உண்மையாயின. அப்பொழுது நீ நோயிலே அனுப்பி யிருப்பதைத் தெரிவித்து என்னைத் தடுத்திராவிட்டால் நானே கொட்டாலுக்குச் சென்று "காந்தத்தை" யழைத்து வந்திருப் பேன்; அவள் எவ்வளவோ உயர்ந்த ஸ்திதியிலிருக்க வேண்டிய பெண். அவளுடைய ஜாதகத்தை மறுபடியும் பார்க்க விரும்பு கிறேன். அவள் வெகு உன்னதபதவியில் இருக்கவேண்டிய கிரகங்கள் அவள் ஜாதகத்தில் காணப்படுகின்றன. ஆனால் ஏதோ ஒரு பாபகிரகம்— விஷப்பூச்சி— எங்கோ நல்ல இடத்தில் நுழைந்து கொண்டு எல்லாவற்றையும் கெடுத்திருக்க வேண்டும். அந்த விஷப்பூச்சி என் கையில் அகப்படுமாயின் அதைச் சின்ன பின்னப்படுத்திச் சிதைத்து விடுவேன் என்றார்.

லக்ஷ்மீகாந்தம் வெகு நேரத்திற் கப்பால் மூர்ச்சை தெளிந்து தனது பிதாவைக் கண்குளிரப் பார்த்து, ஆயாஸ மேலீட்டினால் மறுபடியும் கண்களை மூடினாள். சில மணி நேரங்கள் கழிந்ததின் மேல் பெரியவர் தமது குமாரத்தியை வலது புறத்திலும், கிருஷ்ணமூர்த்தியை இடது பக்கத்திலும், விஜயநாதனின் மனை வியை ஸமீபத்திலும் உட்கார வைத்துக்கொண்டு ஈசன் கருணைக்கு வியந்தார். லக்ஷ்மீகாந்தம், "அப்பா! இவர் யார்" என்று கிருஷ்ணமூர்த்தியைக் குறிப்பிட்டுக் கேட்க, அதற்கு விடையாகப் பெரியவர் ஒரு கதையையே சொல்வாராயினர்.

குழந்தாய்! உனக்கு சாந்தி முகூர்த்தம் நிச்சயித்திருந்த இரவில் திடீரென்று நீ காணாமற் போனாய். எங்கேனும் கிணற்றில் வீழ்ந்து விட்டாயோ வென்று தோட்டத்திலுள்ள மூன்று கிணறு களிலும் தேடினோம். மறுதினம் அநேக இடங்களுக்குத் தந்தி கொடுத்தோம். ஒரு பைராகியுடன் ஒரு சுந்தரமான பெண் சென்றதாகப் போலீஸாரால் கேள்வியானோம். அப்பெண் நீயா கவே இருக்கவேண்டு மென்றும், உன்னைச் சோக்தபோடி

போட்டு மயக்கிக்கொண்டு போய்விட்டதாகவும் கருதினேம். பிறகு அதைப்பற்றி நெடுநாள் விசாரித்தும் விவரம் தெரியவில்லை. கல்கத்தாவிலுள்ள ஸஞ்சீவ சந்திரபாபுவும் எனது தந்தியின் மேல் இங்கு வந்து தம்மால் ஆனவரையும் பார்த்துக் குன்றிய மனத்துடனும் திரும்பினர். இந்த சமயத்தில் கும்பகோணத்தில் விஷபேதி வெகு கொடூரமாகப் பரவி அரவிந்தனும் சௌந்தரவல்லியும், ருக்மணியும் அடுத்தடுத்து மூன்று தினங்களில் அந்தகனுல கெய்தினர். நானும் அதனல் பீடிக்கப்பட்டேனுயினும் தப்பியது ஈஸ்வர சங்கல்பமே. பிறகு கும்பகோணத்தில் இருக்கப் பிரியமற்று பூர்விகமாகிய திரிச்சிஞப்பள்ளிக்கு வந்து சேர்ந்தேன். ருக்மணி சாகுந் தருணத்தில் உன் விஷயமாகச்செய்த சகல அக்கிரமங்களையும் எடுத்துக் கூறி, அரவிந்தன் உனது கணவனல்ல வென்ற விவரமும் நவின்று மடிந்தாள். குலசேகரனைப்பற்றிய செய்தி ஏதும் எட்டவில்லை. ஆனல் விஜயநாதன் மட்டும் இன்னும் உயிருடன் இருந்து கொண்டிருக்கிருன். ரங்கபாஷியமும் குடும்பசமேதமாக சவுக்கியமே. உனது தாயார் தனது திவ்ய தேசயாத்திரையை முடித்துக்கொண்டு ஏழரை வருஷங்கள் கழிந்த பின்னர் பல பெண்கள் கூட்டத்துடனும் திரிச்சிஞப்பள்ளி வந்து சேர்ந்து என்னை வணங்கி உன்னை நினைந்து புலம்பினுள். காசிக்குச் சென்ற நான்காவது வருஷத்தில் எவ்விதமாகவோ ஜனக்கூட்டத்தில் குலசேகரனைப் பிரிய நேரிட்டதென்றும், அதன் பின்னர் சென்ற மூன்று வருடங்களாகக் காசியில் கால் வீக்கங் கொண்டு வியாதிப்படுக்கையாய்க் கிடந்ததாகவும் அவளுடன் துணைவந்த பெண்கள் கூறினர். அவர்களுக் கெல்லாம் தக்க மரியாதைகள் செய்து விடை கொடுத்தனுப்ப, அவர்கள் உன் தாயைப் பிரிய மன மின்றி மிக்க வியாகூலத்துடனும் போய் வருவதாகக் கூறிச் சென்றனர். அதன் பிறகு திரிச்சிஞப்பள்ளியிலேயே வாசமாயிருந்தோம். ஒரு பெண்ணும் குழந்தையும் பிறந்தனர். அக்குழந்தை தான் கிருஷ்ணமூர்த்தி. ஆண்மகப்பேறு இல்லையே என்ற எனதுநீடித்த குறையை

ருக்மணி பூர்த்தி செய்யாமல், உன் தாயே நிறைவேற்றிவைத்தாள்''—என்று சகலமும் விஸ்தாரமாகத் தெரிவித்தார். ருக்மணி, சௌந்தரவல்லி—இவர்களின் மாணத்திற்கு லக்ஷ்மீகாந்தம் உண்மையாகவே மனப்பூர்வமாய்த் துக்கித்து வருந்தினாள். அதுதான் உத்தமர்களின் லக்ஷணம். தனது ஸகோதரனைக் கண்டு இறும்பூதுற்று, "ஆநந்தா"வின் பத்திராதிபரே! உமக்கு மிக்க வந்தனம். தங்கள் பத்திரிகைக்கு நான் எனது கஷ்டங்களைத் தெரிவித்துக் கடிதம் எழுதப்போக, அதனால் நான் மிக்க சுகிர்தமடைந்தேன். தாமும் தமது பத்திரிகையும் என்று ஓங்கி விளங்குக, என்று புகழ்ந்தாள். அதற்குக் கிருஷ்ணமூர்த்தி "அக்கா! என்னை அந்த மரியாதை வைத்துப் பேசவேண்டாம். வா— போ— நீ— என்று ஏக வசனமாக அதிகாரத்துடன் பேசினால் தான் என் மனம் குளிரும்—திருப்தி தரும் என்றார். லக்ஷ்மீகாந்தத்துக்கு இப்பொழுது மிக்கப் பூரிப்பேயானாலும், தனது பிரிய பர்த்தாவைப் பற்றிய விவரம் எதும் தெரியவாராமையே அவளுக்குப் பெரும்வாதனையாக இருந்தது. விஜயநாதனின் மனைவியும் அவர்களுடனேயே லண்டனில் இருந்து வந்தாள். "லக்ஷ்மீகாந்தமும் கிருஷ்ணமூர்த்தியும்" தீவிரத்தில் தங்களின் ஜென்மபூமிக்குச் செல்லவேண்டுமென்று முயன்றுகொண் டிருந்தனர். அவர்களுடைய தந்தையும் அதற்கு உதவியாக நிற்பதானார்.

பிரிந்தவர்களைச் சேர்ப்பதும், ஒன்றுபட் டிருப்பவர்களைப் பிரிப்பதும், அதிக ஆசையை அபிமானத்தை ஒருவர் மீது அளவு கடந்து வைத்துவிட்டால், உடனே அவர்களை இந்த உலகத்தினின்றே பிரித்து இனி என்றும் காணமுடியாதவாறு செய்து விடுவதும் மிக்க விநோதமே! பகவானுடைய திருவிளையாட்டினைப் பாருங்கள்! சிருஷ்டிகர்த்தாவாக இருந்து பிராணிகளையுண்டாக்கி, இரக்ஷக கர்த்தாவாயிருந்து அவைகளைக் காப்பாற்றி விருத்திபடுத்திப் பின்னர், ஸம்ஹார கர்த்தாவாயிருந்து அழித்து விடுகின்றார். இப்படிச் செய்யாவிட்டால் அவருடைய திறமை விளங்காதோ!

# அத்தியாயம்—13

## பெண் வேடம் கொலைக்கு ஆஸ்பதமாகுமா ?

லண்டன்மாநகர்க்குச் சென்ற ஸஞ்சீவபாபுவைப் பற்றி யாதொரு செய்திகளும் நமக்கு எட்டவில்லை. ஆனால் தாம் சுகமே போய்ச் சேர்ந்ததற்கு மட்டும் ஒரு தந்தி யனுப்பியிருந்தார். தாம் புறப்படுவதின் முன்னர், பிரேமநாதன் கேஸுக்கு வேண்டிய ஸகல ஆதாரவுகளையும் சேகரித்து அரசப்பனிடம் அந்த தஸ்தாவேஜிகளை யெல்லாம் கொடுத்து, ரங்கபாஷியத்தின் வக்கீலான ஸ்ரீநிவாச ஐயருக்கும் கேஸின் நுட்பங்களை விரிவாக உரைத்துவிட்டு, அப்பால்தான் அவர் லண்டன் பிரயாணத்தை வைத்துக் கொண்டார்.

நாளாக ஆக ரங்கபாஷியத்தின் பைத்தியமும் குறைந்து ஒரு நிலைக்கு வரலானது. ஜெனகலக்ஷ்மி, இராஜம்மாள் இவர்கள் அடிக்கடி அவரைக் கண்டு தேறுதல் புகன்றுவந்ததும் ஒருவிதத்தில் சகாயமாக முடிந்தன. ஆஸ்பத்திரி அதிகாரிகள் அவருக்கு சித்தப் பிரமை நீங்கிவிட்டதென்று தெரிவித்துவிட்டபடியால், அவர் கேஸை விசாரிப்பதற்கென நாளும் குறிக்கப்பட்டது. அரசப்பன் தானே இருந்து ஸகலமும் செய்வதானான். பலபேர் வேலைக்காரர்களைவிட, விஸ்வாச ஊழியனான அரசப்பனைப் போன்ற ஒருவன் இருப்பது எவ்வளவோ மேல்.

திங்கட்கிழமை பகல் 11-மணிக்கு திரிச்சி செஷன்ஸ் கோர்ட் கூடிற்று. ரங்கபாஷியம் நாயுடுவைக் கோர்ட்டுக்குக் கொண்டு வந்ததும், மறுபடியும் நிமிஷத்திற்கு ஒருதடவை புத்தி

பேதிப்பதானார். ஜெகநாதநாயுடுவும் போலீஸ் பாராவுடன் நிறுத்தப்பட்டிருந்தார். அவரது குமாஸ்தாபோன்று நடித்துக்கொண்டிருந்த சீநிவாஸப் பிள்ளையும் வந்திருந்தார். அனைவரும் பகல் 11-மணிக்கே வந்துவிட, விஜயநாதன் மட்டும் இரண்டு மணிக்கு வந்து சேர்ந்தான். அவன் வருவதற்கும், கேஸ் தொடங்கப்படுவதற்கும் சரியாக இருந்ததால், வக்கீல் சீநிவாசய்யர் விஜயநாதனைப் பார்த்து, நாங்களெல்லாம் இவ்வளவு நேரமாகக் காத்திருந்தும், ஆரம்பிக்கப்படாத விசாரணை, தாங்கள் வந்ததும் தொடங்கப்படுவது ஆச்சரியம்தானென்றார்.

அதற்கு விஜயநாதன், தனக்குக் கோர்ட்டென்றால் பாலும் பழமும் சாப்பிட்டமாதிரி யென்று உரைத்து, கோர்ட்டார் கேஸை மாற்றி மாற்றிப் போட்டுக்கொண்டு போவதைப் பார்த்தால், அக்கோர்ட்டில் தானே ஒரு புறத்துநிற்கும் வாதியும், இன்னொரு பக்கத்தில்நிற்கும் பிரதிவாதியும், ஒருவரை யொருவர் நெருங்கிச் சமாதானமாய்ப் போய்விடுங்களென்று கற்பிப்பதுபோலிருக்குமென்றும் உல்லாஸமாகப் பேசுவதானான். இந்த சம்பாஷணையின் இடையிலே ரங்கபாஷியம் நாயுடுவின் கேஸ் கூப்பிடப்பட்டது. கவர்ன்மெண்ட் வக்கீல் மிஸ்டர் தொண்டரடிப்பொடி ஐயங்கார் கவர்ன்மெண்ட் தரப்பில் கேஸை எடுத்துச் சொல்வதானார்.

**தொண்டரடிப்பொடி.**—"இதுகாறும் எத்தனையோ விதமான கொலைக்கேஸ்கள் இந்தக் கோர்ட்டில் விசாரணைக்கு வந்திருந்தபோதிலும், இந்தக் கேஸைப்போல் அவ்வளவு சாதுர்யத்துடனும்கூடிய பிரமிப்பான கொலையைப்பற்றிய செய்திகளை நான் முன்பும் கேட்டதில்லை; இனி கேட்கப்போவதும் அபூர்வமே. மகா சமயதந்திர ஸஞ்சீவியான ரங்கபாஷியம் நாயுடு ஒரு பயங்கரமான கொடூர வதையினால் தனது மருமகனான பிரேமநாதனைக் கொன்றுவிட்டிருக்கின்றார். கொன்றது மட்டுமல்ல; பெண்வேடம் ஒன்றையும் தான் தரித்து, மெதுவாக ஊரை விட்டுச் சென்றுவிடவும் பிரயத்தனப் பட்டிருக்கின்றார். மாடியின் மீது பிரேமநாத

னின் சவம் கிடக்கும்போது, ரங்கபாஷியம் நாயுடு கீழே இறங்கிச்சென்றால், அப்போது யாரேனும் பார்த்துவிடும்பக்ஷத்தில், அது, தான் செய்த கொலையை நிரூபிப்பதற்குப் போதுமான சாக்ஷியமாகி விடலாமென்றும், ஆனதால் கொலை நடந்த காலத்தில் தான் அங்கே இராததுபோலவும், அன்றிரவு வேறு ஒரு ஊரில் இருந்தது போன்றும் ருசுப்படுத்தி விடுவதற்காக, தன்னை எவரும் கண்டுகொள்ள முடியாதவாறு நேர்த்தியான பெண்வேடம் தரித்துக்கொண்டிருக்கிறார். உடனே அவர் ஏறிக்கொண்டு செல்லுகைக்காக மோட்டார் வண்டியும் தயாராய் வீட்டு வாயிற்படியில் காத்துக்கொண்டு நிற்கின்றது. அவர் நடத்திய கொலையால் உண்டான ஆயாஸம் தீர்வதற்கும், நெஞ்சு கொஞ்சம் திடப்பட்டு நிற்பதற்கும் உதவியாக ஒரு டம்ளர் காபி சுடச் சுடக் கொண்டுவரும்படி ஏற்கனவே கட்டளையும் ஆகியிருக்கிறது. "ஆயிற்றா—ஆயிற்றா" என்று தம் வேலைக்காரனை அவசரப்படுத்தியும் இருக்கிறார். காபி சாப்பிட்டதும் சுகமாக—சொகுஸாக மோட்டாரில் ஆரோகணித்து, திரிச்சி ஜெங்கிஷனுக்குச் சென்று, அங்கிருந்து சென்னைக்குப் பிரயாணப்பட்டு விடுகிறதென்று உத்தேசம். சென்னைக்குச் செல்வதற்கு வேண்டிய டிக்கட்டு கூட மத்தியானமே வாங்கிவரச் செய்து, அதையும் தயாராக வைத்துக்கொண்டிருக்கிறார். ஆகவே டிக்கட் வாங்கும் சிரமமும் இவருக்குத் தேவையில்லை. நேராக மறுநாட் காலையில் சென்னை நகர் போய்ச் சேர்ந்து, அங்கே தமது பெண் வேடத்தைக் கலைத்துவிட்டு, ஏதும் அறியாதவர் போல் இருந்து கொண்டு விடவேண்டுமென்று உத்தேசித்துக் கொண்டார். இவ்வளவுக்கும் ரங்கபாஷியம் நாயுடுவின் பெயரே கிடையாது. யாரோ ஸர்வாலங்கிருத பூஷிதையான ஒரு பெண்மணி, பிரேமநாதன் கொலை செய்யப்பட்ட சில நிமிஷங்களுக்குப் பிறகு, அந்த வீட்டினின்றும் வெளிப்பட்டுச் சென்றதாக மட்டும், அந்த சமயம் பார்த்தவர்கள் சொல்லக்கூடும். பிரேமநாதனின் கொலையின்போது ரங்கபாஷியம் நாயுடு இருக்கவேயில்லையென்றும், அன்றையதினம் அவர் சென்

னயில் கடற்கரை யோரத்தில் காற்று வாங்கிக் கொண்டிருந்தா ரென்றும் வெகு நன்ருக ருசுப்பிக்கப்பட்டுப் போகும். ஒரு கொடூரமான கொலைக் கேஸ்—இப்படியாகக் குற்றவாளி இன்னு ரென்று தெரிந்து கொள்ளமுடியாதபடி தப்பிப் போய் விடுகின் றது. ஹா! எவ்வளவு சாதுரியமான போக்கு!! இது ஒரு நாயுடு காரின் கற்பனையல்லவா? பூர்வம் ஒரு காலத்தில் ராஜ்யபாரம் தாங்கி அரசு செலுத்தியவர்களின் சந்ததியைச் சேர்ந்தவராகிய ரங்கபாஷியம் நாயுடுவுக்கு யுக்தி புத்திகளை இன்னெருவர் சொல் லிக் கொடுக்கவா வேண்டும்? கோர்ட்டார் உண்மையும், பிரத்தி யக்ஷமுமான இவ்விஷயங்களைப் பற்றித் தீர்க்கமாய்க் கவனித்து, குற்றவாளியை,—அவனுக்கு வாஸ்தவத்தில் கிடைக்க வேண் டிய,—தண்டனைக்கு உட்படும்படி செய்விக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.''

ஸ்ரீநிவாஸ ஐயர் :—“மிஸ்டர் தொண்டரடிப்பொடி ஐயங் கார் சொல்வதை நான் முற்றிலும், ஒவ்வொரு எழுத்திலும் ஆக்ஷேபிக்கின்றேன். ரங்கபாஷியம் நாயுடு மகா தர்மவான். வீண் கௌரவங்களுக்கு ஆசைப்படாதவர். மேலும் அவர் ஒரு லக்ஷ் மீமான். பி. எ. பட்டதாரி. இறந்து போன பிரேமநாதனுக்கே அவர் தமது குமார்த்தியைக் கொடுக்கவேண்டு மென்று, பல வருஷங்களாக எண்ணமிட்டுக் கொண்டு வந்திருக்கின்ருர். இந்த சமயத்தில் திடீரெனப் பிரேமநாதன் வந்து சேருகிருன். அவன் வந்து சேர்ந்த இரண்டாவது தினத்தில் ஜெகநாத நாயுடு வீட்டில் அவனை யாரோ அடித்துக் கொன்றிருக்கிருர்கள். அத்தருணத்தில் தெய்வீகமாக மாடியின் உள்ளே ரங்கபாஷியம் நாயுடு இருந்திருக் கிருர். இதுதான் சாக்கென்று அவனை அடித்துக் கொன்றவர் கள், அவர் மீது அந்தப் பழியைப் போட்டு விட்டுத் தப்பித்துக் கொண்டு போய்விட்டார்கள். ஒரு குற்றமும் புரிந்திடாத நிரபராதி யான ரங்கபாஷியம் நாயுடுவைப் போலீஸார், ஸந்தர்ப்ப ஸாக்ஷியங் கள் பொருத்தமாயிருக்கிற தென்று அவரைக் கைது செய்து விட்டார்கள். தமது குமார்த்தியைப் பிரேமநாதனுக்குக் கொடுக்க

நினைத்து, அதற்காக வைத்திருக்கும் ரங்கபாஷியம்நாயுடு அவனைக் கொன்ருரென்ருல் அது நம்பத்தக்கதாயில்லை.”

**தொண்டரடிப்பொடி**:—“மிஸ்டர் ஸ்ரீநிவாச ஐயர் என்ன சாதுர்யமாகப் பேசினுலும், ரங்கபாஷியம் நாயுடுவை நிரபராதி யாக்கிவிட முடியாது. அவர் குற்றவாளியல்லவென்று பல காரணங்களை எடுத்துக் காட்டினுலும், இந்தக் கொலைக் கேஸில் முக்கியமான காரணமாகிய அவர் தரித்த பெண்வேட சம்பந்தமாய் மிஸ்டர் ஸ்ரீநிவாச ஐயர் ஒன்றுமே சொல்வதற்கு முடியாதவராயினர். இதுவே அவரது வாதிப்பின் பலஹீனத்தைக் குறிப்பிக்கின்றது. பிரேமநாதனின் கொலை திடீரென்று செய்யப்பட்டதாயில்லாமல், புத்தி பூர்வமாக நன்ருக ஆலோசித்துச் செய்யப்பட்ட கொலை என்பதற்குத் தடையேயில்லை. அதற்காகத்தான் சுண்ணும்புக்காரத் தெருவிலுள்ள தம் வீட்டில் இந்தக் கொலையை நடத்தாமல், மணியக்காரத் தெருவுக்கு வந்து, அங்கு ஜெகநாத நாயுடு வீட்டில் இக்கொலையை நடத்திவிட்டு, இந்தப் பழியை அவ்வீட்டின் சொந்தக்காரரான ஜெகநாத நாயுடுவின் மீது ஏற்றிவிட்டுத் தாம் தப்பித்துக்கொண்டு விடலாமென்று முயன்றிருக்கின்ருர்.”

**ஸ்ரீநிவாஸ ஐயர்**.— “மிஸ்டர் தொண்டரடிப் பொடியின் ஆக்ஷேபங்களை ஒரு நிமிஷத்தில் தவிடுபொடியாக்கிவிடக்கூடும். அவரைப்போல மடமடவெனப் பேசிக் கோர்ட்டின் காலத்தை வீணுக்குவதில் எனக்குப் பிரியமில்லை. ரங்கபாஷியம்நாயுடு பெண் வேடம் போட்டுக்கொண்டதே இக்கொலைக்கு முக்கிய காரணமாகுமாஞல்,—அது சம்பந்தமாக நான் போதுமானபடி மறுத்துவிட்டால்,—அதாவது, கொலைக்காக ரங்கபாஷியம் நாயுடு பெண் வேடம் தரிக்கவில்லையென்று மெய்ப்பித்துவிட்டால் — அம்மட்டில் ரங்கபாஷியம் நாயுடுவை நிரபராதியாகக் கோர்ட்டாரவர்கள் குறிப்பிட்டுக்கொள்ள முடியுமா ?”

**கோர்ட்டார்**.— “மிஸ்டர் தொண்டரடிப்பொடி ஐயங்கார் கூறுவது, பிரேமநாதனின் கொலையிலுள்ள பல கேள்விகளிலூ

ஒன்ருயிருக்கலாம். ரங்கபாஷியம் நாயுடு பெண்வேடம் தரித்தது ஒருவனைக் கொலைசெய்யும் எண்ணத்தோடல்ல—என்பதை மிஸ்டர் ஸ்ரீநிவாஸஐயர் எவ்விதமாக நிரூபிக்கப் போகிருர் என்பதைப் பார்க்க இந்தக் கோர்ட்டாருக்கு அதிகப் பிரியமாக இருக்கிறது.''

ஸ்ரீநிவாஸ ஐயர்.—"ரங்கபாஷியம் நாயுடு எதற்காகப் பெண் வேடம் தரித்தாரென்பதை அவர் வாய்மொழியாகவே சீக்கிரம் வெளிப்படுத்துகின்றேன். மனிதர்க்கு ஏற்படக்கூடிய துக்கங்களெல்லாம், சுயேச்சையாய் இருக்கக்கூடிய சுதந்தரம் வாய்க்கப் பெற்ருல் அவை யாவும் தோற்ருமல் விலகிப்போகும். ரங்கபாஷியம்நாயுடுவுக்கும் இழந்த தமது சுயேச்சையைத் திரும்பவும் அடையும்படியான தினம் ஒன்று வரும். அதற்காகவே லண்டனுக்கு ஸஞ்சீவபாபு அனுப்பப்பட்டிருக்கிருர். அக்குறித்த நாள் நெருங்குங்காலை அவரது சித்தப்பிரமையும் விலகும். அச்சமயம் அவர் பெண்வேடம் புனைந்ததின் காரணமும் அன்னவரது வாய்மொழியாலேயே வெளியாகிவிடும். ஸமீபத்தில் அவர் பூரணமாகக் குணமடைந்தும், மறுபடியும் சித்தப் பிரமைக்கு ஆளாகி யிருக்கிருர். ஒரு நிமிஷத்தில் இருந்த நிதானம் அடுத்த நிமிஷத்திலில்லை.''

தோண்டாடிப்போடி.— "ஸ்ரீநிவாஸய்யரைப் போன்ற சிறந்த அறிவுக் கூர்மையுடைய வக்கீல்களே, தங்கள் கேஸினுடைய யோக்கியதையைச் சிதறடித்துவிடுவது பெரும் பரிதாபம்! சாமான்யமாகக் காண்பதற்கரிய பாஷைத்திறமை அவரது பேச்சுகளிலே காணப்படுகின்றது. ஆனுல், அவர் தம்மிடமிருக்கிற துணிக்குத் தக்கபடி சட்டையை வெட்டித் தைத்துக்கொள்ள வேண்டும். சாத்தியமற்ற கேஸ்களில் தலையிடுவது தாழ்ச்சிக்கே ஹேதுகாம். ரங்கபாஷியம் நாயுடு தமது சித்தப்பிரமை தீர்ந்த பிறகு, தாம் தரித்த பெண் வேடத்தின் காரணத்தைச் சொல்லப் போகின்ருராம். நமது நண்பரவர்களுக்கு ஜோஸியமும் கொஞ்சம் தெரியும்போ லிருக்கின்றது.''

கவர்ன்மெண்ட் வக்கீல் பேசி முடிந்ததும், முதல் சாக்ஷியாக ஜெகநாத நாயுடு கூப்பிடப்பட்டார்.

**ஜெகநாத நாயுடு.**—"சென்ற எப்பிரல் மாதம் 18-ம் தேதி யன்று காலை ரங்கபாஷ்யம் நாயுடு மணியக்காரத் தெருவில் உள்ள எனது வீட்டில் மேல் மாடியில் இடம் வேண்டுமென்றார். அதற்கு நானும் இசைந்தேன். என் வீட்டில் பிரேமநாதனைத் தருவித்துக் கொலைசெய்துவிட்டு, அந்தப் பழியை என் மீது சுமத்துவதற்கு உத்தேசித்திருந்தார். அதற்கு நான் தப்பியது பகவத் ஸங்கல்பம். அவருக்குத் துணையாக அவரது வேலைக்காரனையும் அழைத்து வந்திருந்தார்."

**ஸ்ரீநிவாஸ ஐயர்.**—"ஜெகநாத நாயுடு! விஜயநாதனை எப்பிரல் மாதத்தில் எப்போது சந்தித்தீர்?"

**ஜெகநாத நாயுடு.**—"விஜயநாதனை எப்பிரல் மாதத்தில் நான் சந்திக்கவே யில்லை. அவனை நான் ஜனவரி மாதத்தில் சென்னையில் பார்த்ததுதான்; பிறகு கிடையாது."

**ஸ்ரீநிவாஸ ஐயர்.**—"நல்லது, இந்தக் கையெழுத்து உம்முடையது தானா?"

**ஜெகநாத நாயுடு.**—"என்னுடையது போலத்தான் தோற்றுகிறது."

**ஸ்ரீநிவாஸ ஐயர்:**—இந்தக் கையெழுத்துள்ள இக்கடிதம் போஸ்டாபீஸாரின் அநுமதியைப் பெற்று, தபாலாபீஸ் ரிக்கார்டுகளிலிருந்தும் ஸஞ்சீவபாபுவினால் வேருக எடுத்து இங்கே ஆஜர் செய்யப்பட்டது. அக்கடிதத்தில் கண்டுள்ளபடி அவசரத் தந்தி யொன்று சென்னையில் இருக்கும் விஜயநாதனுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அத்தந்தியில் "**பிரேமநாதன் சங்கதி, அவன் வருவதாகச் செய்தி, உடனே புறப்பட்டு வா. அவசரம்**—" என்று கண்டிருக்கின்றது. இந்தத் தந்தி எப்பிரல் மாதம் 12-ம் தேதி மாலையில் விஜயநாதனுக்குக் கிடைத்த தென்பதற்கு, இதோ அவனுக்கு சென்னையில் வந்த தந்திக் கடிதத்தையும், தபாலாபீஸ் முத்திரையையும் நன்கு பார். இத்தந்தி ஸஞ்சீவபாபுவினால், சென்னையில் விஜயநாதனுடைய மேஜையி னுள்ளிருந்தும் கண்டெடுக்கப்பட்டது."

ஜெகநாத நாயுடு:—"என் கையெழுத்தைப் போல் போட்டு எவரேனும் தபாலாபீஸில் தந்து தந்தி அடித்திருக்கலாம். நான் விஜயநாதனை எப்பிரல் மாதத்தில் சந்தித்ததே யில்லை."

ஸ்ரீநிவாஸ ஐயர்:—"நல்லது; தாமோதரம் ஐயங்காருக்கு நீயும் விஜயநாதனும் சேர்ந்து எப்பிரல் மாதம் 17-ம் தேதியில் எழுதிய கடிதத்தை இதோ வாசிக்கிறேன்."

* * * *

மணியக்காரத் தெரு, திரிச்சி. எப்பிரல்மீ 17.

அன்பு மிக்க தமோதரம் ஐயங்கார் அவர்களுக்கு நமஸ்காரங்கள். தங்களின் புத்தி நிமிஷத்துக்கு நிமிஷம் மாறுவதாகக் காண்கிறது. தாங்கள் இப்போது வெளிப்பட்டால், நாங்கள் போட்டிருக்கும் பாதையே கெட்டுவிடும். உமக்கு ஜாமீன் கையெழுத்திட்டு வாங்கித் தந்த கடன் தொகைக்காக ரங்கபாஷியத்தின் மீது வாரண்டு பிறந்திருக்கின்றது. அந்த வாரண்டுக்காக அவர் அஞ்சாவிடினும் எங்கள் போதனையால், சற்றுத் தலை மறைவாயிருக்க விரும்பி, எங்களின் அழைப்புக்கு இணங்கி, மணியக்காரத் தெருவிலுள்ள எனது வீட்டிற்கு வந்து மேல் மாடியில் இருக்கிறார். இன்று காலை 10-மணிக்கு உங்களைக் கண்டு பேசி வந்த பிறகு, நாங்கள் நாட்டுக் கோட்டைச் செட்டியாரைக் கண்டு வார்த்தையாடி வற்புறுத்தி, உமது கடனுக்கு ரங்கபாஷியம் கையெழுத்திட்டிருப்பதால் அந்தக் கடனை வசூலிக்க, அவர் மீது வாரண்டு பிறப்பிக்கும்படி செய்தோம். அதற்காகவே உம்மை மறைந்து கொள்ளும்படி காலையில் உம்மைச் சரிசெய்து விட்டு வந்தோம். அதற்காக நீர் கேட்ட 200-ரூபாயையும் இரண்டு தினத்தில் உமக்கு, நீர் செய்த உதவிக்குப் பரிசாகக் கொடுத்து விடுகிறோம். நீங்கள் மட்டும் ஜெனகலக்ஷ்மியிடம் எங்களால் வாரண்டு பிறப்பிக்கப்பட்டதாகச் சொல்லிக் காட்டிக் கொடுத்து விடப்படாது. மேற்கொண்டு பணம் தேவையாகில், இன்னும் ஒரு

ஐம்பது ரூபாய் பெற்றுக்கொள்ளலாம். இவ்வளவிற்கும் நீங்கள் மீறி நடக்கும்பக்ஷத்தில், உங்களுடைய உயிர் உங்களுக்குச் சொந்தமல்ல. கண்டிதமாய் அறியவும்.

க. கோ. ஜெகநாத நாயுடு.

விஜயநாதன்.

* * * *

ஸ்ரீநிவாஸ ஐயர்.—“ஜெகநாதா! இனி மறைத்துப் பயனில்லை. யாவும் வெளியில் வந்துவிட்டது. இக்கடிதத்திற்கு நீ என்ன சொல்லுகிறாய்? இது நீயும் விஜயநாதனும் சேர்ந்து அனுப்பியதுதானா? முன்பு குறிப்பிட்டபடி எப்பிரல் மாதம் 12-ம் தேதியில் விஜயநாதனுக்கு நீ தந்தி தர, அவன் அன்று மாலை மெயிலில் அவசரமாய்த் திரிச்சிக்குப் புறப்பட்டு விடுகிறான். அவனும் நீயும் சேர்ந்து கொண்டு 17-ம் தேதியன்று தாமோதரம் ஐயங்காருக்கு இக்கடிதத்தை எழுதியிருக்கிறீர்கள். அந்த 12-ம் தேதிக்கும் இந்த 17-ம் தேதிக்கும் இடையில் நீங்கள் இருவரும் கலந்து செய்த வேலைகளும் சீக்கிரத்தில் இக்கோர்ட்டின் முன்பு வெளியாகி விடுமென்பது நிச்சயம். ஸ்வாமீ பெட்டியில் நீ மறைத்துவைத்திருந்த கடிதங்களெல்லாம் ஸஞ்சீவபாபுவின் கையில் அகப்பட்டு விட்டன என்பதையும் அறிந்துகொள். கடைசியில் தாமோதரம் ஐயங்கார் உன் சொற்படி நடவாமல், ரங்கபாஷ்யம் கைதுசெய்யப்பட்டது தெரிந்ததும், ஜனகலக்ஷ்மியிடம் அவர் விரைந்துவந்து நீங்கள் நாட்டுக்கோட்டைச் செட்டியிடம் சென்று செய்த ஸகல விஷயங்களையும் கூறிவிடவே, அச்சங்கதியை நீ கேட்டதும், அவரைப் பின் தொடர்ந்து பொடியில் மயக்கத்தைக் கொடுத்துக் கொன்று விட்டாய்போலும்!”

ஜெகநாத நாயுடு.—“நான் கைது செய்யப்பட்டுப் போன பிறகு, என்னைப் பற்றி என்ன பேசினாலும் செல்லுமென்று தங்கள் அபிப்பிராயம் போல் தோன்றுகிறது.”

ஸ்ரீநிவாஸ ஐயர்.—“விஜயநாதன் எப்பிரல் மாதம் 18-ம் தேதியன்று இரவு திரிச்சியில் அப்போது நடைபெற்ற “நவர

ஸாலங்கார் நாடகக் கம்பேனி"யில் சதாரம் சரித்திரத்தில் திருடனுடைய பாகத்தை நடிக்கவேண்டியவன். அன்றையதினம் ஸ்பெஷலாக—பிரத்தியேகமாக—சதாரம் வேடம் பூண்டு நடிக்க வேண்டுமென்று ரங்கபாஷியத்துக்கு 18-ம் தேதியன்று காலையில் விஜயநாதனால் ஒரு கடிதம் அனுப்பப்பட்டதுண்டா?"

ஜெகநாதநாயுடு.—"அனுப்பவே யில்லை. அன்றையதினம் சதாரம் நாடகமே அக்கம்பெனியில் கிடையாது. நாடக நோட்டீஸில் விஜயநாதனின் பெயரும் வரவில்லை."

ஸ்ரீநிவாஸ ஐயர்.—"இதோ அந்தக் கடிதம்; இத்துடன் நாடக நோட்டீஸையும் பார். நான் கூறியவைகள் அதிலிருக்கின்றனவா? நாடகக் கொட்டகையிலிருந்துகொண்டு அக்கடிதம் ரங்கபாஷியத்துக்கு எழுதியதாய் அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த சமயம் ரங்கபாஷியம் உன் வீட்டுமேல் மாடியில் இருக்கிறார் என்பதையும் மறவாதே. அது போதாமல் விஜயநாதனைக்கொண்டும் இக்கடிதம் அனுப்பியிருக்கிறாய்."

ஜெகநாத நாயுடு.—"எல்லாம் வடிகட்டினபொய்."

ஸ்ரீநிவாஸ ஐயர்.—"நாயுடுகார்! நீர் பொய்யென்று தான் சொல்வீர். இதுதான் அந்தக் கடிதம். இந்தக் கடிதங்களெல்லாம் ஸஞ்சீவபாபுவின் அரும் பிரயாஸத்தால் அகப்பட்டிருக்கின்றன. ஆனைக்குட்டி ஐயரை நீ மோசம் செய்தவகையில், உன் வீடு சோதிக்கப்பட்டபோது உனது மோசங்களை வெளிப்படுத்தக் கூடிய இக்கடிதங்கள் அடங்கிய கைப்பெட்டியை வெகு தந்திரமாக ஸஞ்சீவபாபு கைப்பற்றிக்கொண்டார். விஜயநாதன் எழுதிய கடிதத்தைப் படிக்கிறேன்.

* * * *

நவரஸாலங்கார நாடக கம்பேனி,

திருச்சி, எப்பிரல்மீ 18.

அன்பார்ந்த ரங்கபாஷியம் நாயுடுகாருக்கு, என் மனமுவந்த வந்தனங்கள்! இப்போது இக்கொட்டகையில் எங்களுக்குள் நிகழ்

தித்திக்கும் நூதனநூல்! வி. பி. யில் விலை ரூ 1-3-0.

# கதாமோஹனரஞ்சிதம்

## ஓர் அபூர்வ கதா நூல்

சுவை ததும்பிய கதைகளும் நாவல்களும் கொண்டது.

"பிரஜாநுகூலன்" பத்திராதிபரவர்கள் நவீனமாக இயற்றியது.

### இக்கதா நூலின் விஷய அட்டவணை.

---


1 நளகீர்த்தி.
2 நான்கு சங்கீத ரஸிகர்கள்.
3 கதவு சாத்து.
4 நிவேதிதா.
5 கர்ண - துரியோதனு.
6 சிரிக்கச்செய்யும் சிங்காரம்.
7 குடித்தன ரீதி.
8 நீதிகள்.
9 ஸ்வர்ணகுமாரி.
10 மூன்று நண்பர்கள்.
11 பேரின்பம் தேவிட்டுமோ?
12 கழுதை மனிதனுவனு?
13 ஒரு சக்கரவர்த்தியும் பாலனும்.
14 குண்டூசியில் கோபுர வாழ்வு.
15 ஓர் இளைஞனின் மாதா.
16 காணமற்போன குமார்.
17 பத்மாவதியின் தடுமாற்றம்.
18 காஞ்ஜ் இராஜகுமாரி.
19 தொலைந்து போ!
20 ஒரு மனிதனின் சிறுமை.
21 இரு வைதீக மாதர்கள்.
22 ராமதாஸ் பந்துலு.
23 திருவாழ்த்தானின் வாக்கு.
24 ஸ்ரீமதி கனகவல்லி.
25 போடியின் பிரதாபம்.
26 மாதவன்.
27 மூன்று சாதுரியங்கள்.
28 ஹிதமே செய்வோம்.
29 பலதேசத்தார் வழக்கங்கள்.
30 ஓர் திருடனின் துறவு.
31 மாமனுரின் சாமர்த்தியம்.
32 ஒரு பிரபுவின் மனைவி.
33 பலவித மனிதர்கள்.
34 ஒரு நாவிதனின் காதல்.
35 வேடிக்கை விநோதங்கள்.
36 விடுகதைகளின் விநோதங்கள்.
37 தமிழாங்கில நேசர்கள். [பவம்
38 ஸ்ரீ காசிராமேஸ்வர யாத்திராநு
39 பார்லிமெண்ட் நிர்வாகம்.
40 இங்கிலாந்தில்இந்தியன்க்ஷியார்
41 அந்தமான் தீவினரின் அதிசயம்
42 என் கிழத்தனத்தையடைகிறீர்
43 துண்டு துணுக்குகள் [கள்
44 இலக்கணஞானம். [ணங்கள்
45 ஒருஉத்தியோககனவானின் சகு
46 கார்படிகனின் வறுமை.
47 வீரவரனின் இராஜபக்தி.
48 சந்திரஸ்வாமியின் சாதுர்யம்.
49 தருணசந்திரனின் ஏமாற்றம்.
50 கனவோ! நினைவோ!
51 வீரநாட்டின் வாழ்த்து.
52 தேன்கூடு.
53 நாம் கண்ட அநுபவம்
54 ஷேக்ஸ்பியரது நடிப்பு.
55 தமிழ் மொழிபெயர்ப்பு.
56 பிதா பக்தி (கீதம்)
57 வீணுக்குப் பேசுவது.
58 உழைப்பின் நகரவாழ்க்கை.
59 குதிரை இரவல்!
60 சாமர்த்திய சிறுவர்கள் மூவர்
61 சூடாமணி.
62 இன்பதுன்ப சதிபதிகள்.
63 இருவேந்தர்களின் சமரஸம்.
64 விசாலாக்ஷியின் நாடக அவா
65 நரசிங்கராவின் நாகரீகம்.
66 ஒரு வைத்திய பண்டிதர்!
67 கணித விநோதங்கள்.
68 கைதேர்ந்த தீரன்.

எல்லாம் உலக அநுபவங்கள்! யாவும் ருசிகரமான குறிப்புகளே! வேடிக்கை விநோதங்கள், சிறுவர் சிறுமியர்க்கான விடுகதைகள், காதலர் கடிதங்கள், நாடக விசேஷங்கள், ஆசாரத்திருத்த தமாஷ்கள், நவீன ரஸிகர்களின் மனப்போக்குகள், கோணல்வழிகள், லோகரகஸியங்கள், பைத்திய பாதைகள், வீரரஸ கீதங்கள்; தமிழ்ச்சுவை நிரம்பிய கதைகள், ஆங்கிலப் போக்கையொட்டிய சிறு சிறு நாவல்கள், இன்சுவை யூட்டும் துண்டு துணுக்குகள், தமிழறிவு, ஞானம், உலகநிலை, தேசநீதி, வலிமை, வாழ்க்கை, நேச ஸல்லாபங்கள்—இன்னோரன்ன பல்வகைத்தாய சேகரங்கள் இக் 'கதாமோஹனரஞ்சித''த்துள் நிறைந்து நிற்கின்றன. பார்க்க அழகாய், சொகுஸான பைண்டாய், வாசிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாய் படிப்பவர்க்கே உயர்வாய் ஒளிரும்.

## 1. தமிழ்ச்சுவை.

கதா மோஹன ரஞ்சிதம்:—தமிழ்ச்சுவை பெரிதும் கொண்டது. பலவித பாஷைகள் - எழுத்தியல் - சொல்லியல் - தொடர்பியல் - புணரியல் - பதவியல்-யாப்பியல்-அணியியல்-பொருளியல்-இரட்டைக்கிளவி-தொகைக் குறிப்பு - வெள்ளை, முடுகுவாக்கியம்-சங்கேதம்-பரியாயவணி-விசேஷவணி-முதல், வழி, சார்புநூல்கள்-அலங்காரம்-செய்யுள்-தமிழ், சமஸ்கிருத பதங்கள்-அகஸ்தியர், தொல்காப்பியர் - மங்கலம் - இடக்கரடக்கல்-ஆகுபெயர்-அன்மொழித்தொகை - உண்மைக்கு மிஞ்சி வர்ணித்தல் - இன்னும் அநேக அருமையான குறிப்புகளை உதகரித்திருக்கின்றோம்.

இவைகளை வாசித்தபின்பு இலக்கணநூல்களைக் கற்கப்புகின், அதில் சுவை தோன்றி மேன்மேலும் பயில்தற்து அவா எழுதல்கூடும்.

## 2. வேடிக்கை விநோதங்கள்

கதா மோஹன ரஞ்சிதம் வேடிக்கை விநோதங்களில் வெகு விசேஷித்தது. சேவகனின் புகழ்ச்சி - ஒரு வைதீகரின் ரூபாய் - அக்காஆனை - எலுதரம்சொன்னே - உன் கண்ணுலம் - மொட்டை - ஒரு தையற்காரன் - பக்கத்து உளவு - லோபியின் கண்ணாடி - காதல் - பெரிய மனுஷ்யர் - ஸ்திரமான கோபம் - ஊமை - வேதாந்தம் - ஆடவர் சிந்தனை - கால்வாய் - பஞ்சபாத்திரம் - தானேசெய்தல் - அழுகை 5 ராஜ்யம் ஜெயிக்கும் - ஒரு லாயரின் உயில் - தூக்கு சிக்ஷையில் சுகம்-சோறளியாத புருடன்-பத்து பெரிய மனிதர்கள் - ஒரு ஹைகோர்ட் வக்கீல் - எது நல்லவேளை - ஒரு தாவா!—சப்திக்காத ரூபாய் - புதுவக்கீல் - தீய்ந்த ரொட்டி - சுருட்டு வர்த்தகன் - ஒரு கடன்காரன் - தன் சொம்பு - அடியிலே பால் - ஒரே பிடிவாதமா ?—பால்காரன் மகன் - ஒரு சீனதேசத்திருடன் - தாதமய்யங்கார் - மருந்தின் கசப்பு - மறுநாள் மிதத்தல் - கறுப்புக்குல்லா - இன்னும் அநேக விநோதங்கள் இதில் அடங்கியுள்ளன.

## 3. விடுகதைகளின் விநோதம்.

கதா மோஹன ரஞ்சிதத்தில் 66 விடுகதைகளைக் காணலாம். விடுவிப்புகளை மட்டும் கீழே தருகிறேம்.

1-விபூதிப்பழம், 2-குங்குமப்பூ, 3-நெருப்பு, 4-வாழையிலை, 5 - விளாங்காய், 6-புளியங்காய், 7-ஆமணக்கு, 8-குழி, 9-பலாப்பழம், 10-ஆகாசபாணம், 11-தோப்பரை, 12-ரஸ்தா, 13-இதழும் பல்லும், 14-பேச்சு, 15-எழுத்துகள், 16-சிட்டுக்கட்டு, 17-நரைமயிர், 18-அண்ணன், 19-நாக்கு, 20-பனைமரம், 21-உள்ளிப்பூண்டு, 22-கிணறு, 23-ஊசி, 24-தேள், 25-மனுஷ்யன்,

26-ஒரேபழம், 27-கொசு, 28-திண்ணை, 29-கிழிசல், 30-தபால்கடிதம், 31-புத்திமதி, 32-நாளைத்தினம், 33-மாதுரம், 34-வலை, 35-மூக்கு, 36-தேசபடம், 37-விரல், 38-வியாஜ்யம், 39-கண்ணிமை, 40-மெழுகுவத்தி, 41-கண்ணாடி, 42-மூக்குச்சளி, 43-இருபத்திரண்டு, 44-தேன்கூடு, 45-கட்டில், 46-நக்ஷத்திரம், 47-பருத்திக்காய், 48-மத்தளம், 49-கண்ணாடி, 50-ஒன்றுமில்லை, 51-தோசை, 52-கால் கண் காது கை, 53-தென்னைமரம், 54-தேங்காய், 55-நிழல், 56-மழைத்துளி, 57-யந்திரம், 58-பாய், 59-தங்கை, 60-கண் 61-மூக்குக்கண்ணாடி, 62-கதிர், 63-நெற்பயிர், 64-சொக்காய், 65-பாம்பு, 66-ரூபாய், ஒவ்வொன்றும் வெகு நேர்த்தியாயிருக்கும்.

இப்புஸ்தகம் விரும்புவோர் உடனே எழுதிக்கொள்ளவும். சொற்ப காபிகளே கைவசம் உள்ளன. பிரஜாநுகூலன் ஆபீஸ், ஸ்ரீரங்கம்.

---

# ஸ்ரீ விஷ்ணுஸ்தல யாத்திராமார்க்க விவரணம்.

இதுகாறும் வெளிப்படாத நூதன நூல்.

☞ ஒவ்வொரு க்ஷேத்திரத்துக்கும் ரயில்மார்க்கம், வண்டிப்பாதை முதலிய விவரங்கள் வெகு தெளிவாய்க் காண்பிக்கப்பட்டு உயர்ந்த பதிப்பாய் வெகு நேர்த்தியாக அச்சிடப்பட்டிருக்கின்றது. வெகு அருமையான நூல். விலை அணா 5

பிரஜாநுகூலன் பத்திராதிபர் தயாரித்தது ☜

(1) சப்தபுரிகள், முக்திநகர், (2) சுயமாக உண்டான ஸ்தலங்கள், (3) தேவர்கள், ரிஷிகளால், நியமிக்கப்பட்ட ஸ்தலங்கள், (4) புண்ணிய தீர்த்தங்கள், அதன் உற்பத்திஸ்தலம், அவற்றை எங்கெந்த இடத்திற் காணலாமென்பது, அதற்கு வழி, (5) மலைமேலுள்ள சன்னதிகளுக்கு வழி, (6) புராண ஸ்தலங்கள் 38-க்கும் வழி, (7) திருப்பதிகள் 108-க்கும் வழி விபரம், ரயில்பாதை, வண்டிப்பாதை, (8) திருப்பதிகளின்மீது மங்களாசாசனம் செய்த பாசுரங்களின் புதுவிதமான நூதன கணிதக் குறிப்பு. (9) யாத்திரைக் குறிப்புகள். இன்னும் அநேக முக்கியமான விஷயங்களும் அடங்கியது.

எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு பத்திராதிபர்,
"பிரஜாநுகூலன்" ஆபீஸ், ஸ்ரீரங்கம் திருச்சிறாப்பள்ளி.

---

எல்லோரும் வாங்குங்கள்! எல்லோரும் படியுங்கள்!
வருஷ சந்தா ரூ. 2.] எல்லோரும் களிகூறுங்கள்! [வெளிநாடு ரூ. 2-8-0
வேத முக்கியம்! வேத சிலாக்யம்!

# பிரஜாநுகூலன்.

## நாவல்களுடன் கூடிய ஒரு சிறந்த செந்தமிழ் மாதாந்தரப் பத்திரிகை.

1. "பிரஜாநுகூலன்" பத்திரிகை 40 பக்கங்களுடனும் 1904-ம் வருட முதற்கொண்டு எங்களால் வெகு அழகாயும் ஒழுங்காயும் புத்தகரூபமாய் நடைபெற்று வருகின்றது. உலகத்திலே பலவித போதனைகளில் அநுபவ

பூர்வமாய்ப் பிரதி விஷயங்களேயும் எடுத்துப் பேசுதல் பொதுவாக எவருக்கும் அதிக கஷ்டசாத்தியம். இப்படி அநுபவங்களே எடுத்து விவரிப்பதில் அவைகளேப் புதுச்சுவை நிரம்பிய சிறு சிறு கதைகளினூடே கலந்து அவ்வழியாகப் போதகஞ்செய்தல் பாராட்டத் தக்கதாகும். பிரஜாநுகூலன் பத்திரிகையை நடத்திவரும் நம்முடைய கருத்தும் இதுவே.

2. "பிரஜாநுகூலன்" பத்திரிகை கதைகளுக்கும் நாவல்களுக்கும் மிகவும் பெயர்பெற்றது. கதைகளேப் படித்து அதன்மூலமாகப் புத்தக வாசிப்பிலே ஒருவித ருசி தோன்றி, அப்படியே பலவிதமான நூல்களேயும் வாசிக்க விருப்பமுண்டாகி, உயரிய கிரந்தங்களிலும் பார்வை பிரவேசித்து பழக்கம் மிகுதியாகித் தேர்ச்சி எய்தினோர் வெகுபேர். ஆயிரம் பக்கங்களாக விருந்தபோதிலும் சலியாது படிக்க விருப்பம் விளேப்பது கதைகளும் நாவல்களுந்தான். பிரஜாநுகூலனில் பிரதிமாதமும் புதிய கதையொன்று காணலாம்.

3. "பிரஜாநுகூலன்" பத்திரிகை பிரபஞ்சத்தின் அநுபவ விநோதங்களே வெகு நன்ருய் எடுத்துக் காட்டுகிறதென்று எல்லோரும் புகழ்கின்ருர்கள். சிறுவர் சிறுமியர்கள் அனேவரும் தமது உள்ளத்தில் மறைந்துநிற்கும் ரகசியங்களெல்லாம் இதிற் காணப்படுகின்றனவேயென்று வெகுவாக வியந்து நேசிக்கின்றனர். உலகத்தில் பிரதியொரு மனிதனிடத்திலும் நிகழப்படாநின்ற அனுபவ விஷயங்களேத் திரட்டிக் கதா ரூபமாகக் கொடுப்பதே இப்பத்திரிகையின் நோக்கம் ஏனென்ருல் அநுபவத்திற்கு மிஞ்சின ஞானமும், அதனினும் மேம்பாடான படிப்பினேயும் வேறேதுமில்லே. அநுபவமே குரு, அநுபவமே அரசன், அநுபவமே சாஸ்த்ரம், அநுபவமே சாக்ஷி, அநுபவமே உத்தம சிநேகிதனுயுமிருக்கிறது.

4. "பிரஜாநுகூலன்" பத்திரிகை உலக நன்மையைக் கருதி வெளியிடப்படுகிறது. அரிய பல நூலாராய்ச்சியாலும், அனுபவ உலகவியல்பாலும், அறிவுடையோர் தெரிவித்த கேள்விபளவாலும், கற்று, உணர்ந்து, அடைந்து கேட்ட பயனெல்லாம் இப்பத்திரிகையில் எல்லோரும் கற்று உணர்ந்து அடையலாம். எந்த சாதிக்கும் எந்த சமயத்திற்கும் எந்த நூலிற்கும் இதன் கருத்து ஒத்திருக்கும். பாலர்கட்கும் இது பயன்தரும். குமரர்கட்கு மிது நலங்கொடுக்கும். விருத்தர்கட்கு மிது மேலாம்பயனே. வெறுங்கதையன்று. வீண்வளர்ப்பன்று. காசு பறிப்பதற்கன்று, கௌரவங் கருதியன்று. அதன் பெருமை பார்த்தால் தெரியும், படித்தால் அறியலாம்.

5. "பிரஜாநுகூலன்" பத்திரிகை காகிதத்தாலும் எழுத்தாலும் வேலேயழகாலும், விஷய அருமையாலும், நடையின் இனிமையாலும், நாகரீக மிகுதியாலும் உயர்ந்து விளங்குகிறது. ஆழ்ந்த கருத்தமைந்து இனியசொற்களால் எளிய நடையோடு எல்லோருக்கும் பயனளிக்குமாறு சந்தமினிய சுந்தரத் தமிழில் எழுதப்பட்டுத் தேனினுஞ் சுவைத்துப் பாலினும் வெளுத்துப் பொருளினும் மிகுத்து அலங்காரம்செய்து அறிவை விளக்கி ஆநந்தங் கொடுப்பதாயிருக்கின்றது,

6. "பிரஜாநுகூலன்" பத்திரிகை 14 - வருஷங்களாக நடைபெற்று பெருந்தன்மை வாய்ந்து தமிழ்நாடெங்கணும் பரவியுள்ளதென்பதை யாவருமறிவார். இதைப் பூர்ணமாய்ப் படித்து, தாங்கள் உடனே இப்பத்திரிகைக்கு சந்தாதாரராகவேண்டுமென்பது எங்களுடைய கோரிக்கை. உடனே ஆர்டர் செய்யுங்கள்.

☞ மானேஜர், பிரஜாநுகூலன் ஆபீஸ், ஸ்ரீரங்கம், திருச்சி.

உம்முடைய கூந்தலை ரக்ஷிக்க உமக்கு விருப்பமிருந்தால் மேன்மையான

புதிய

# புஷ்பாகர

என்னும் தைலத்தை உபயோகியுங்கள்.

இது கூந்தலை செழிக்கு
வளரச்செய்யும்.




ஜெய்பூர் நிஜ மூலிகைகளால்
தயார்செய்யப்பட்டது.

இது மூளையையும், கண்களையும் குளிர்ச்சி செய்வதில் நிகரற்றது. ஸ்திரீ புருஷர்கள், மாணக்கர்கள் முதலிய அனைவருக்கும் இன்றியமையாதது. இதர கூந்தல் தைலங்களைப்போல் இதில் கிரோசின் முதலிய மூளைக்கும் கூந்தலுக்கும் தீங்கு செய்யக்கூடிய சரக்குகள் இல்லை. அப்படியிருக்கிறதென்று ரூபிப்பவர்களுக்கு ரூபாய் 500 இனாம்.

இப்பேர்ப்பட்ட காரண்டியுடன் வேறேந்த ஹேரயில்களாவது கிடைக்கின்றதா? இதுவே இதற்கு அத்தாக்ஷி. ஒருதரம் உபயோகித்தால் என்றைக்கும் கைவிடமாட்டீர்.

ஒரு சீசாவின் விலை ரூபா 1—0—0

ஓடோ மோஹினி டிபோ,
94, சீனாபஜார், மதராஸ்

12 JUL 1918

# எண்ணம் ஈடேறுமா ?

எண்ணமென்றால் என்ன ? வடிவலங்கார சுந்தர சோபித குணவதியைக் கொள்ளும் எண்ணமா ? ஸத்புத்திரரைப் பெறவெண்ணுகிற எண்ணமா ? சாஸ்வதகாலம் உலகில் இருக்கவேணுமென்கிற எண்ணமா ? மந்திர தந்திர ஜால சமர்த்தனென்கிற பேரெடுக்கவேணுமென்கிற எண்ணமா? வாதி, வைத்தியன், பிரபலஜோசியன், வித்துவான், பட்டதாரி ஆகவேணுமென்கிற எண்ணமா ? வீடு நிலம் தோட்டம் துறவு மிட்டா ஜாகீர் ஜமீன் சம்பாதிக்க வேணுமென்கிற எண்ணமா ? பொன் பூஷண ஆபரணாதிகள் தேடி குபேர சம்பத்தடைய எண்ணமா ? ஞானி, யோகி, ரிஷி, தபோதனர் ஆகவேணுமென்கிற எண்ணமா ? அல்ல, அல்ல. சுயஆட்சி என்று ஒரு பெருங்கூச்சல் இப்போது எங்கும் கேட்கிறதே. இவர்களுடைய "எண்ணம் ஈடேறும—"காடேறுமா—என்பதுதான்.

## வர்த்தமானங்கள்.

சென்னை மாகாணக் கான்பரன்ஸ் காஞ்சீபுரத்தில் கூடிற்று.

பஞ்சாப் மாகாணம் பிரிட்டிஷார் வசமாகி 70 வருஷம்போலாகிறது.

இங்கிலாந்தில் 1917-ம் வருஷம் 25 கோடி பவுன் மதுபானத்திற்குச் செலவாயிற்று.

யுத்தநிதிக்கு அனைவரும் கடன்கொடுங்கள் சன்மானம் செய்யுங்கள். சேனையில் சேர்ந்து பிறரையும் சேரச்செய்து ராஜவிசுவாஸத்தைப் பிரகாஸப்படுத்த நல்ல தருணம் இதுவே முன் வாருங்கள் சமய உபகாரமே பெரிது. ஸத்விஷயத்தில் சிரத்தையாயிருந்தால் அதைச்செய்து முடிக்க தெய்வமே பலம் கொடுக்கும்

---

# இது ஒரு புது நூதனம்.

## காற்றடைக்கும் தலையணை.

இதில் ஒரு சூக்ஷ்மம் உண்டு. அதில் இருக்கும் திருகாணியைக் கழற்றி தலையணை எவ்வளவு உப்புதலும், உயரமும் வேண்டுமோ அவ்வளவுக்கு வாயால் ஊதி, உடனே திருகாணியைப் போட்டுவிடுக வெகு சொகுசாக இருக்கும் காற்றைப் போக்கிவிட்டால் ஜேபியில் மடித்து வைத்துக்கொள்ளலாம் நாகரீகமான வேலை. விலை ரூபாய் ஒன்றே!

அமிர்தம் அண்டு கோ,
தபாற்பெட்டி 222, மதராஸ்.

---

# சுகானந்த மாத்திரைகள்.

இழந்த யௌவன ஸுகத்தை மீண்டும் பெற வைப்பது. விவாக இன்பத்தைப் பூரணமாய் சுவைத்துப் பார்க்கும் ஸக்தியை உண்டுபண்ணுவது. வலிமை, திடகாத்திரம், தேஜஸ், புதுபலம் இவற்றைக்கொடுப்பது. யந்திரங்களில் தயார் செய்யப்பெற்றது. புட்டி ஒன்றுக்கு விலை ரூபாய் ஒன்றே. "ரகசிய ரத்தினம்" என்ற அநுபவ நுட்பங்களடங்கிய நூலையும் வெகுமதியாகப் பெறலாம். உடனே எழுதுக. போலி மருந்துகளில் மயக்கம் வேண்டாம்.

அமிர்தம் அண்டு கோ, தபால்பெட்டி 222, மதராஸ்.